# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 327 ஐப்பசி 02ஆம் நாள் வியாழக்கிழமை 19 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 24


தீபாவளி தினத்தில் பெரும் துயர்

## முல்லை. கடலில் குளிக்கச் சென்ற நண்பர்களில் ஒருவர் மூழ்கிச் சாவு

மற்றொருவரைக் காணவில்லை



முல்லைத்தீவு, ஒக். 19

முல்லைத்தீவுக் கடலில் குளிக்கச்சென்ற இளைஞர்கள் இருவர் திடீரெனக் கடலில் மூழ்கிய நிலையில், நான்கரை மணிநேரத் தேடுதலின் பின்னர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அவரது நண்பனான மற்றைய இளைஞனைத் தேடும் பணி நேற்று முன்னிரவு வரையில் தொடர்ந்தது.

முல்லைத்தீவு உண்ணாப்பிலவைச் சேர்ந்த அன்டனி கிளோட்டஸ் வினோதன் குறுஸ் (வயது -18) என்ற மாணவனின் சடலமே நேற்று மாலை 6.30மணிக்கு மீட்கப்பட்டது. மணற்குடியிருப்பைச் சேர்ந்த அமல்ராஜ் டினோஜன் (வயது-17) என்ற மற்றைய மாணவன் காணாமற்போயுள்ளார்.

"முல்லைத்தீவு நகரச் சுற்றுலாக் கடற்கரைப் பகுதிக் கடலில் ஏழு இளைஞர்கள் நேற்று மதியம் குளிக்கச் சென்றுள்ளனர். திடீரென அவர்களில் இருவரை அலை இழுத்துச் சென்றது. எஞ்சிய ஐவரும் உடனடியாகக் கரைசேர்ந்தனர். அவர்கள் ஏனையோருக்குத் தகவல் வழங்கினர். கடற்றொழிலாளர்கள் துரிதமாகச் செயற்பட்டு படகுகளில் தேடுதல் நடத்தினர். ஆனால் உடனடியாக அவர்களை மீட்க முடியவில்லை" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்கள் இருவர் அலையில் சிக்குண்டு காணாமல் போன செய்தி வேகமாகப் பரவியது. கடற்கரைப் பகுதியில் மக்கள் குவியத் தொடங்கினர். பொலிஸாரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கடற்றொழிலாளர்களின் தேடுதல் துரித >> 22

மட்டக்களப்பில் தீபாவளியன்று சோகம்

## தாயும், மகனும் அடித்து கொலை

விரிவு பக்கம் 03

ஆபத்தில் சிக்கியது இனப் பிரச்சினைத் தீர்வு

# புதிய அரசமைப்பே வேண்டாம் மகாநாயக்கர்கள் ஒரே முடிவு

திருத்தம்கூட வேண்டாம், இருப்பதே போதும் என்பதில் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19

புதிய அரசமைப்புத் தேவையில்லை. தற்போதுள்ள அரசமைப்பில் திருத்தங்களும் செய்யவேண்டியதில்லை. நடைமுறையில் உள்ள அரசமைப்பே போதுமானது. புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை உடன் நிறுத்துங்கள்.

இவ்வாறு இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த பௌத்த பீடங்களும் கூட்டாகத் தீர்மானம் எடுத்து நேற்று அறிவித்தன. புதிய அரசமைப்புக்கான முயற்சியை அனைத்து மகா சங்கத்தினரும் ஒட்டுமொத்தமாக எதிர்க்கின்றோம்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் மல்வத்துபீடம் ஆதரவான நிலைப்பாட்டையும், அஸ்கிரியபீடம் எதிர்ப்பு நிலைப்பாட்டையும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தன. இதனையடுத்து அஸ்கிரிய பீடத்தைச் சமாளிக்கும் முயற்சிகளை அரசின் உயர்மட்டம் முன்னெடுத்திருந்தது. அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

அரசின் இந்த முயற்சிகளுக்குப் பின்னரே, மகாநாயக்க தேரர்களை உள்ளடக்கிய பௌத்த பீடங்கள் மேற்படி முடிவை அறிவித்தன.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து ஆகிய முக்கிய பீடங்களின் சங்க சபைக் கூட்டங்கள் நேற்றுப் புதன்கிழமை கண்டி தலதா மாளிகையில் நடைபெற்றன. அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் முக்கிய நபர்கள் இதில் கலந்துகொண்டார்கள். புதிய அரசமைப்பு, இடைக்கால அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. >> 22

முச்சந்தி முரளி



சிறப்பு! தீபாவளிப் பரிசு
இதுதான் பாருங்கோ...

## வடக்கு – கிழக்கு இணைப்புக்கு ஜேவிபி ஒருபோதும் ஆதரவு தராது

கொழும்பு, ஒக். 19

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்த தமது கட்சி அந்த மாகாணங்கள் மீண்டும் இணைவதை ஒருபோதும் ஆதரிக்காது என்று தெரிவித்துள்ளது ஜே.வி.பி. அந்தக் கட்சியின் >> 22

## கைதிகளின் உடல்நிலையில் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், ஒக். 19

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் மூவரின் உடல்நிலையில் >> 22

## இடைக்கால அறிக்கை குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆய்வு

இன்று கொழும்பில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 19

இடைக்கால அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இன்று ஆராயப்படவுள்ளது. இருப்பினும் இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். பங்கேற்காது என்று தெரியவருகின்றது. >> 22

அரசமைப்பு முயற்சிகளைத் தோற்கடிக்க

## பிக்குகள் படையுடன் களமிறங்கும் மகிந்த

கொழும்பு, ஒக். 19

புதிய அரசமைப்புக்கு எதிரான பரப்புரையை நேரில் களமிறங்கி வழிநடத்துவதற்குத் தீர்மானித்துள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, இதற்காக முன்னணி பௌத்த பிக்குகளைக் கொண்ட பேரவையையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்.

இதற்குரிய பேச்சு >> 22

## தீபாவளி தின அடிதடிகளில் 29 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணத்தில் தீபாவளி தினமான நேற்று ஒரே நாளில் மட்டும் அடிதடி, வாள்வெட்டுக்களில் காயமடைந்த 29 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 23 பேரும், பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் 6 பேரும் நேற்றுச் சேர்க்கப்பட்டனர். >> 22

## அரசியல் கைதிகள் குறித்து மைத்திரியுடன் இன்று பேச்சு

வடக்கில் இருந்து இரு தரப்புகள் தனித் தனியே சந்திக்கின்றன

யாழ்ப்பாணம், ஒக். 19

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் விவகாரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 22

## நீதி அமைச்சர், சட்டமா அதிபருடன் கூட்டமைப்பு இன்று சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம், ஒக். 19

அநுராதபுரத்தில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்திவரும் கைதிகள் மூவரினதும் வழக்குகளை மீண்டும் வவுனியாவுக்கு இடமாற்றுவது தொடர்பில் நீதி அமைச்சர், சட்டம் ஒழுங்கு அமைச்சர், சட்டமா அதிபருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு >> 22

## தனக்குள் இருக்கும் பேயையே மைத்திரிபால குறிப்பிட்டாராம்!

தன்னைப் பேய் என்று சொல்லவில்லை என்கிறார் மகிந்த

கொழும்பு, ஒக். 19

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பேசிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனக்குள் இருக்கும் பேயைக் குறிப்பிட்டாரே தவிர, தன்னைப் பேய் என்று குறிப்பிடவில்லை என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

"மாவ யக்கா அவுசன்னேப்பா" என்ற சிங்கள வசனமானது கோபத்தின் வெளிப்பாடாகும். எனக்குள் இருக்கும் பேயை வெளியே கொண்டு >> 22

## அலைபேசிகள் கவனம்!

கடந்த காலங்களில் கணினிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய ரன்சம்வேர் வைரஸ் >> 22

## சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுக்க முயற்சி; ஒருவர் கைது

>> 22

## தீபாவளி பட்டாசுத் தர்க்கம் வந்து முடிந்தது வாள்வெட்டில்

சுப்பர்மடத்தில் மூவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 19

தீபாவளி தினமான நேற்று வெடிகொளுத்தியதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நேற்றுமாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் என்று தெரிவித்து >> 22

# உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்குக

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.19
தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி குறை கூறுவதையும், விமர்சனம் செய்வதையும் நிறுத்திவிட்டு அரசு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி போர் முடிந்த பின்னர் மே 26ஆம் திகதி நாங்கள் யோசனையொன்றை முன்வைத்தோம். போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களை காயமாற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய செயலணி ஒன்று உருவாக்கப்பட்டு 2 வருடங்களுக்கு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரினோம்.

போரால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களது மனங்களிலும் ஏற்பட்ட காயத்தை ஆற்றுவதற்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று யோசனை முன்வைத்திருந்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சனம் செய்வதாலும், இயக்கம் பற்றி குறைகளைக் கூறி, எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டு வருவதாலும் ஒன்றும் புதிதாக ஆகப்போவதில்லை. வங்குரோத்து அடைந்த பிரிவினரே இதனைத் தொடர்ந்தும் செய்து வருகின்றனர். அதனால் நாடு முன்னேற்றமடையவும், ஐக்கியம் பெறவும் முடியாது.

போரில் நாங்கள் அரசுக்கு ஆதரவளித்தோம். அதன் பின்னர் எதிர்காலத்தை நினைத்து யோசனைகளை முன்வைத்தோம். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு 8 வருடங்களாகியும் அமைக்கப்படவில்லை. ஐ.நாவின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யோசனை ஒன்றையும் முன்வைத்து அதனையே கூறியிருந்தார். இதுவரையிலும் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை -என்றார். (ற)

## இறுதி அறிக்கையை நீதிமன்றம் கொண்டு செல்வதற்குத் தயார்

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19
மத்தியவங்கி பிணைமுறி மோசடி விசாரணைக்கென நியமிக்கப்பட்ட அரசதலைவர் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல தாம் தயார் என சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது


அதற்காக அமைச்சுப் ப்தவியைத் துறக்கவும் தயார். பிணை முறி தொடர்பான விவரங்களை முதலில் தெரியப்படுத்தியது நானே. ஆணைக்குழுவுக்கு அதைக் கொண்டு சென்றதும் நானே. அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த அறிக்கையை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவும் தயார். அதற்கு அமைச்சுப் பதவி தடையாக இருக்குமானால் அதைத் துறக்கவும் தயார் - என்றார். (ற-ரி4)

## மரக்கடத்தல் குற்றச்சாட்டில் இருவருக்குப் பிணை

வவுனியா, ஒக்.19
வவுனியா மாவட்டத்தில் இரு நாள்களாக வனவளத் திணைக்களத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பாரவூர்தி ஒன்றும் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டம் புதூர்ப்பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட பார ஊர்தி கைப்பற்றப்பட்டது என்றும், சாரதி தப்பியோடிய நிலையில் இரு தினங்களும் மேற்கொண்ட தேடுதலில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரு சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதித்த பதில் நீதிவான் குறித்த வழக்கை நவம்பர் மாதம் 1ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ற-101)



## விபத்துக்களில் ஐவர் காயம்

சாலை விபத்துக்களில் காயமடைந்த ஐந்து பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். மீசாலை ஐயா கடையடி தண்டவாளக் கடவையால் இறங்கிய ஓட்டோ திடீரென முதன்மைச் சாலைக்குள் வந்ததால் முதன்மைச் சாலையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு கால் முறிந்தது என்றும் மற்றொருவருக்குக் காயம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

முச்சக்கர வண்டிச் சாரதியும், அதில் பயணித்தவரும் காயமடைந்தனர். கெற்பேலியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் இறங்கியதால் தூக்கி வீசப்பட்டுக் காயங்களுக்குள்ளானார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

விபத்துக்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ற-9)

## டெங்கு ஒழிப்பில் சிக்கியது வீட்டின் நடுவே பதுங்குகுழி

சாவகச்சேரி, ஒக்.18
மீசாலை கிழக்கில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்குச் சென்ற பொலிஸார் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தியதாக நம்பப்படும் நிலக்கீழ் பதுங்குகுழி ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

கடந்த இரு நாள்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுகாதாரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக வீடு வீடாகச் சென்ற சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுடன் சென்ற பொலிஸார் பதுங்குழியை அவதானித்துள்ளனர். அந்தப் பதுங்கு குழியானது வீட்டின் நடுவே ஆரம்பித்து சுமார் 30 அடி தொலைவில் வெளியேறும் பாதையுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101,9)

## நாட்டைப் பிரிப்பதற்கு ஜே.வி.பி. இணங்காது

### விஜித ஹேரத் தெரிவிப்பு

நாட்டை பிரிப்பதற்கு எனது கட்சி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கியதும் இல்லை, வழங்கப் போவதும் இல்லை. அதை நாட்டு மக்களும், தேரர்களும் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார். கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியலில் ஓரங்கட்டப்பட்டவர்கள் இன்று எமது கட்சியின் நிலைப்பாட்டைத் திரிபுபடுத்தி வேறு விதமாக மக்கள் மத்தியில் பரப்புரை செய்கின்றனர். மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தவே எமது கட்சி செயற்படுகின்றது. மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க முற்பட்டார். வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஒருபோதும் இணங்க மாட்டோம். இலங்கையின் இறைமையைப் பாதுகாக்க மக்கள் விடுதலை முன்னணி எப்போதும் முன்னின்று செயற்படும் - என்றார். (ற-ரி4)

## காணாமற்போன பெண்கள் பொலிஸிடம் சரணடைந்தனர்

கொழும்பு, ஒக்.19
கடந்தவாரம் கொலன்னாவைப் பகுதியில் இருந்து காணாமற்போயிருந்தனர் என்ற கூறப்பட்ட மூன்று பெண்களும் நேற்று கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலன்னாவைப் பகுதியைச் சேர்ந்த, ஒன்றரை வயதுடைய குழந்தையின் தாயான 19 வயதுடைய வத்சலா பெரேரா அவரது கணவரின் 15 வயதுடைய சகோதரி மற்றும் அயல் வீட்டில் வசிக்கும் 14 வயதுடைய தமிழ் சிறுமி ஆகிய மூவரும் கடந்த சனிக்கிழமை முதல் காணாமற்போயிருந்தனர். மூன்று பெண்களில் இரு பெண்கள் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் 14 வயதான தமிழ் சிறுமியை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அவரும் நேற்று கம்பகா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

15 வயதுடைய பெண்ணின் ஆண் நண்பர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார் என்றும், 14 மற்றும் 15 வயதுடைய இரு பெண்களும் மருத்துவ பரிசோதனைக்குட் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளில் 3 பெண்களும் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளனர் என்றும், பலகோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

# மைத்திரியுடன் பேசி தீர்வு கண்டிருக்கலாம்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19
தமிழ் அரசியல் கைதிகளின் உயிருடன் விளையாடக் கூடாது. அரச தலைவர் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுடன் பேசியபோது, ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் உணர்ச்சிவசப்படாது பேசியிருக்கலாம். அரச தலைவர் அவர்களைப் பேச்சுக்கு அழைத்தபோது சம்மதித்துப் பேச்சுக்குச் சென்றிருக்கலாம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.
தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எம்மை நம்பியிருக்கும் அரசியல்கைதிகளின் உயிருடன் விளையாடும் செயற்பாடாக எமது செயற்பாடுகள் அமைந்துவிடக் கூடாது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பேச்சு மூலம் தீர்வை எட்டியிருக்கலாம். அரசியல் கைதிகளின் உயிருடன் விளையாடி, அதை வைத்து அரசியல் செய்ய எவரும் எண்ணக் கூடாது.
அரசியல் கைதிகள் விவகாரத்தில் கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோரின் கருத்துக்கும் சிவாஜிலிங்கத்தின் கருத்துக்கும் பல வித்தியாசங்கள் உள்ளன. சிவாஜிலிங்கம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அரச தலைவர் பேச்சுக்கு அழைத்தபோது எங்கு, எப்போது என்ற விடயங்களைக் கேட்டிருக்க வேண்டும். மாறாக உணர்ச்சிவசப்பட்டுப் பேசியிருக்கக் கூடாது.
எந்தப் பிரச்சினைக்குமான தீர்வும் வீதியில் கிடைக்காது. அரச தலைவர் அந்த இடத்தில் இறங்கி வந்தமை பெரிய விடயம். முன்னைய அரதலைவராக இருந்தால் அந்த இடத்தில் தடியடியே நடந்திருக்கும். கடந்த ஆட்சியை விட இந்த ஆட்சியில் கிடைத்திருக்கும் உரிமைகளைச் சாதுரிமாகப் பயன்படுத்த வேண்டும். அனைத்தையும் நாம் எதிர்மறையாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.
தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டமும், கோரிக்கையும் நியாயமானது என்பதை நாம் உணர்ந்து கொள்கின்றோம். அவர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அது விடயத்தில் நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும.
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விவகாரம் தொடர்பில் விரிவான விளக்கம் ஒன்றை நாடாளுமன்றில் முன்வைத்துள்ளார் - என்றார்.
(ந-46)

## கொக்கெய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

நவகமுவ, ஒக்.19
நவகமுவ, அலுபோமுல்லவில் கொக்கெய்ன் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 50 கிராம் 490 மில்லிகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்றும், கைது செய்யப்பட்டவர் பாணந்துறை, ஹிரனவைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.
(ந-ரி2)

## கடத்தலைத் தடுத்த பொலிஸார் மீது சூடு

கொழும்பு, ஒக்.19
மாடுகளைக் கடத்த முயன்றவர்களை கைது செய்ய முயன்றபோது பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பொலிஸாரும் பதிலுக்குத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
இந்தச் சம்பவம் பண்டாரகமவில் நடந்துள்ளது. வாகனம் ஒன்றில் மாடுகளைக் கடத்த முயன்ற கும்பலைப் பொலிஸார் மடக்கிப் பிடிக்க முயன்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பொலிஸார் பதிலுக்குச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் வான் மற்றும் துப்பாக்கி என்பவற்றைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. ரி 56 ரக துப்பாக்கி மற்றும் கத்தி என்பவை மீட்கப்பட்டன.
சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ந-ரி4)



## காட்டு யானை அட்டகாசம்: பயன்தரு மரங்கள் நாசம்

முல்லைத்தீவு, ஒக்.19
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மாங்குளம் பகுதிகளில் நேற்று குடிமனைக்குள் புகுந்த காட்டுயானைகள் பயன்தரு மரங்கங்களை அழித்தன என்று தெரிவிக்கப்பட்டது.
அதிகாலை வேளை குடிமனைகளுக்குள் புகுந்த யானை தென்னம்பிள்ளைகள், வாழை மரங்கள் போன்ற பயன்தரு மரங்களையும் நாசமாக்கின என்று தெரிவிக்கப்பட்டது.
போரின் பின்னரே காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்றும் அவை வேறிடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு இறக்கிவிடப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
வரட்சி காரணமாக விவசாயமும் அழிந்த நிலையில் மீதமிருக்கும் வான் பயிர்களை யானைகள் அழிக்கின்றன. உடனடியாக எமது பகுதிக்கு யானைகள் வராமல் பாதுகாப்பு வேலி அமைத்துத் தந்து எமது வாழ்வாதாரத்தை உயர்த்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
(ந-ரி2)

## தாயும், மகனும் அடித்துக் கொலை

### கொள்ளையிடச் சென்றவர்களின் பாதகச் செயல் எனச் சந்தேகம்





மட்டக்களப்பு, ஒக்.19
மட்டக்களப்பில் உயிரிழந்த நிலையில் தாயும், மகனும் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் ஏறாவூர், புன்னக்குடாவில் சவுக்கடி, முருகன் கோவில் வீதியிலுள்ள வீடொன்றில் நடந்துள்ளது. ராஜா மதுவந்தி (வயது26), மதுசன் (வயது 11) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.
வீட்டுக் கூரை பிரிக்கப்பட்டிருந்தது என்றும், உயிரிழந்தவர்களின் முகங்களில் கடும் காயங்கள் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.
உறவினர் ஒருவர், இன்று காலை இவர்களது வீட்டுக்குச் சென்ற போது, வீடு திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. உள்ளே சென்று பார்த்த போது, தாயும் மகனும் சடலமாகக் கிடப்பதைக் கண்ட அந்த உறவினர், ஏனையோருக்கு அறிவித்ததுடன், ஏறாவூர் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.
மதுவந்தியின் கணவர் வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் நிலையில் தாயும் மகனும் இங்கு வசித்துள்ளனர். தாயும், மகனும் தனித்திருந்த போது வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அவர்களைக் கொலை செய்துவிட்டு பணம், நகைகளைக் கொள்ளையிட்டிருக்கலாம் என்ற கூறப்படுகின்றது.
இது தொடர்பாகப் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(ந-ரி4)

## கொள்ளையிட திட்டமிட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.19
கொள்ளையிடத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அகலம்ப பாலத்துக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இளைஞர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்ளையிடத் திட்டமிட்டிருந்தனர் என்று தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ந)

## நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஒக்.19
திருகோணமலை, மகதிவுல்வெவ குளத்தில் நீராடச் சென்ற விமானப் படை உத்தியோகத்தர் ஒருவர் நீரில் மூழ்கிய உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
உயிரிழந்தவர் கிபிஸ்ஸ, நாகல்வெவவைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் இருந்து மொறவெவ விமானப் படைத் தளத்துக்குக்கு கட்டுமானப் பணிக்காக வந்தவர்களில் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
உயிரிழந்தவரின் உடல் மகதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-45)



தீபாவளியை முன்னிட்டு ஆலயம் சென்று வழிபாடு செய்துள்ளார் முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச. தெகிவளையில் உள்ள சிறி விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளிலேயே அவர் கலந்து கொண்டார். (ந)

## ஓட்டோ விபத்தில் மூவர் படுகாயம்

கொழும்பு, ஒக்.19
கொழும்பு, கினிகத்தேனையில் நடந்த விபத்தில் 3 பேர் படுகாயமடைந்தனர். முச்சக்கர வண்டி சாலையை விட்டு விலகி 220 அடிப் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.
கொழும்பு குணசிங்கபுரத்திலிருந்து ஹற்றனுக்குச் சென்ற முச்சக்கர வண்டி நேற்று அதிகாலை கினிகத்தேனை ரம்பாதெனிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்தது. முச்சக்கரவண்டியில் சாரதி உட்பட மூவர் பயணித்துள்ளனர். அவர்கள் மூவரும் பலத்த காயங்களுடன், வட்டவளை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.
(ந)













## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி சிந்தாமணி



பிறப்பு 20.11.1936 இறப்பு 18.10.2017

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிந்தாமணி நேற்று (18.10.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிந்தாமணியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை - காமாஞ்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் திசைவீரசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கல்யாண கிருஷ்ணன் (இந்தியா), மதுசூதனன், ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் ரோகினி (இந்தியா), வசந்தமலர் (ஆசிரியை - யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க, பாடசாலை) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், லக்ஸ்சுமணன், ஜீவரத்தினம் மற்றும் ஜெயா, சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் கேதுஜன், யதுர்ஷனா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 614 1099 குடும்பத்தினர்.

### திருமதி சறோஜினிதேவி தங்கராஜா



பழம்றோட், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராய், வட்டக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி தங்கராஜா கடந்த (17.10.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் ஆறுமுகம் தங்கராஜாவின் அன்பு மனைவியும் யுகேந்திரா (ஆசிரியர் - வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), கவிநாத், ஜனா (மாணவி - உயர் தொழிநுட்பக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயும் இராஜலட்சுமி, தங்கரத்தினம், தேவராஜா, காலஞ்சென்ற புஸ்பரத்தினம் மற்றும் வாசுகி, சசிலதா (கொலன்ட்), புஸ்பலதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் றோஸ்மலர், செல்வராஜா, குமுதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 217 2997 குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு 14 . 10 . 1941



உதிர்வு 12 . 11 . 2015

### அமரர் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

(முன்னாள் நடத்துநர் - இ.போ.ச யாழ். சாலை)

*திதி : 19.10.2017*

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் ஆறிடுமோ -உங்கள் நினைவலைகள்
நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவு
எங்களைவிட்டு என்று மறையாது
மாண்டீர் என்று சொல்ல மனம் மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடனே காலமெல்லாம் வாழ்ந்தீரே
கலங்கவிட்டு எம்மையெல்லாம் பிரிந்து சென்றீர்களே
நீங்கள் கடந்த இடமெல்லாம் வெறுமையாய் போனதையா
காலமெல்லாம் எங்களுடன் வாழ்ந்திடுவீர் என்றிருந்தோம்
காலனே உம்மைப் பறித்தானோ - எத்தனை
ஜென்மம் எடுத்தாலும் ஆறிடுமோ எம் துயரம் !!!

புத்தூர் வீதி,மீசாலை வடக்கு,
கொடிகாமம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு பத்மகுணசிங்கம்

(சாரதி)



மண்ணுலகில் 08.01.1959 விண்ணுலகில் 18.10.2017

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் குரும்பைசிட்டி அம்மன் கோவிலடியை வசிப் பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பத்மகுணசிங்கம் நேற்று (18.10.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான நல்லதம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சின்னப்பிள்ளை, அன்னலஷ்மி, அருளானந்தம் (ஆனந்தன்), மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கரத்தினம், தங்கமணி, தர்மராணி ஆகியோரின் மைத்துனரும் நிர்மலன் (கண்ணன்), நிரோஷன், நிரூசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:அண்ணா
077 3311732 அருளானந்தன் (ஆனந்தன்)

## அல்வாயில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஒக். 19
அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றுவிட்டு வெளியேறிய வரணியைச் சேர்ந்த 21 அகவையுடைய இளைஞன் மீது இனந்தெரியாதோர் கத்தியால் குத்தியுள்ளனர். கழுத்தில் கடும் காயத்துடன் அவர் மந்திகை வைத்தியசாலையில் நேற்று இரவு சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5-26)

## மதிப்புறுத்தல் நிகழ்வு இன்று

சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் ஏற்பாட்டில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்புறுத்தல் நிகழ்வு தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் இன்று காலை 10 மணிக்கு, மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் முதன்மை விருந்தினராகவும், சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியப் பிரதிநிதி இ.விஜிதகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## உணவு நிலையத்தில் கைகலப்பு இருவர் காயம்

சாவகச்சேரி, ஒக். 19
உணவு அருந்தச் சென்றவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்றது. தீபாவளி வியாபாரம் முடிந்த பின்னர் போதையில் அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர் என்று பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்படுகிறது. (4-9)

## சந்நிதியான் தேர்முட்டிக்கு நாளை அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.19
தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய புதிய தேர்முட்டிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது.
மதியம் 12.30 மணிக்கு சிறப்புப் பூசைகள் நடைபெற்று நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4-35)

## மூன்றாம் கட்ட உணவுப் பொருள்களை சங்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்

தென்மராட்சி ஒக். 19
தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச செயலக இடர் முகாமைத்து வப் பிரிவு தெரிவித்தது. பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருவதும், இலகு வேலைத்திட்டத்தில் பங்குபற்றிய குடும்பங்களுக்கு கடந்த மாதம் உலர் உணவுப் பொருள்களுக்கு மேலதிகமாக அரிசி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-9)

## சரவணையில் கந்தசஷ்டி

யாழ்ப்பாணம், ஒக். 19
வேலணை சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் கந்தசஷ்டி விரத பூசைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த வழிபாடு தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சூரன் தலை காட்டும் வைபவம் இடம் பெறும் மறுநாள் புதன்கிழமை பி.ப 2 மணிக்கு சூரசங்காரம் நிறைவுபெறும். இறுதி நாள் 26 ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாணம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

### அரசியல் அபிலாசைகளைப் பெறுவதற்கு

# இந்தியா உள்ளிட்ட நாடுகள் தமிழருக்கு பெரிதும் உதவா

## மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் சவால்களை வென்றெடுப்பதற்கு இந்தியா உட்பட உலக நாடுகளின் பங்களிப்பை சமகால பூகோள அரசியலில் பெரியளவில் எதிர்பார்க்க முடியாது என்று வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

இந்தியப் பயணத்தின்போது இதனை உணரக் கூடியதாக இருந்தது என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஓ.பி ஜிந்தால் குளோபல் பல்கலைக்கழகத்தின் அரச மற்றும் பொதுத்துறைக் கொள்கையாக்கல் கல்லூரியால் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நடைபெற்ற 'வலுவூட்டல் கருத்தரங்கில்' உரையாற்றிய பேராசிரியர்கள், புத்திஜீவிகள், மூத்த பத்திரிகையாளர்கள் ஜதார்த்தத்தை உணர்ந்து அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டுமென்ற கருத்தினை முன்வைப்பது போன்று உணரக்கூடியதாக இருந்தது.

இரண்டாம் உலகப் போரின்பின் இனரீதியான போராட்டங்கள் உலகில் வெற்றி பெற்றது மிக அரிது என்ற கருத்தினையும், அதேவேளை போராட்டம் ஓரளவு பலத்தைக் கொண்டிருந்த காலப்பகுதிகளில் தீர்வை நோக்கிச் சென்றவர்கள் ஓரளவு அதிகார வலுவுடைய தீர்வுகளைப் பெற்றிருக்கின்றனர். ஆனால் போராட்டங்கள் வலுவிழந்த நிலையில், தங்களது அரசியல் அபிலாஷைகளைப் முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வினைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் அரிது எனவும் குறிப்பிட்டனர்.

அவுஸ்திரேலிய நிதிப்பங்களிப்புடன், ஆசிய மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் வடக்கு மாகாண சபையின் 14 உறுப்பினர்களும், ஐந்து அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர் - என்றார். (4-8)

### அரசியல் கைதிகளைப் புலிகள் என்றுகூறிய

# பொன்சேகா, ருவானின் கருத்துகளுக்கு உறுப்பினர் சிவாஜிலிங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 19

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலைப்புலிகள் என்று கூறியுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோரின் கருத்துகளுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைச்சிறைகளில்நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலைப்புலிகள் என்றும் அவர்களை தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கைக்காக விடுதலை செய்ய முடியாது என்றும் சரத்பொன்சேகா மற்றும் ருவான் விஜேவர்த்தன கூறியுள்ளனர். அவர்களது கருத்துக்கள் கண்டிக்கப்படவேண்டியவை. ஏற்றுக் கொள்ளமுடியாதவை.

உள்நாட்டுப் போர் நிறைவடைந்த பின்னர் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட 12ஆயிரம் பேர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம். இதேபோலவே தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் வெளியில் இருக்கின்றனர். வெறுமனே 120 வரையான அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்தச் சிறிய விடயத்தையே கூட்டாட்சி அரசு செய்ய முடியாது என்றால், இவர்கள் எப்படி நல்லிணக்கத்தை கட்டியெழுப்பப் போகின்றார்கள்?

அன்னப்பறவை பாலையும் நீரையும் பிரித்து அருந்துவதுபோல தமிழர்களின் வாக்குகளால் வெற்றியடைந்த அரச தலைவர் மைத்திரியும் தமிழர்கள் வேறு சிங்களவர்கள் வேறு என்று பிரித்துப் பார்த்து சிங்களவர்களுக்கு மட்டும் ஏற்றவகையில் செயற்பட்டு வருகின்றார். இதுதானா தேசிய நல்லிணக்கம்?

எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் இலங்கை அரசு காலதாமதம் செய்யாது, நொண்டிக் காரணங்களைக் கூறாது அவர்கள் விடயத்தில் கூட்டரசு விரைந்து செயற்பட வேண்டும் என்றார். (4-8)

# பாரம்பரியக் கலைகளை அறிய நவம்பரில் சிறப்புப் பயிற்சிகள்

### வடக்கு மாகாண கலாசார திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

வடக்கு மாகாணத்தின் பாரம்பரிய கலைகளை கலைஞர்கள் தெரிந்து கொள்ளும் நோக்கில் சிறப்புப் பயிற்சிகள் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ளன என்று மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றித் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:

எமது கலாசாரங்களைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் திணைக்களத்தின் கடமை. கலைஞர்களை ஊக்கப் படுத்தும் நோக்கில் ஒருநாள் பயிற்சி நெறி மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ளது.

நடனம், பாரம்பரிய கிராமிய நடனம், கூத்து போன்ற ஐந்து வகையான கலாசார நிகழ்வுகளை மையமாகக் கொண்டு அந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களால் இந்த பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த கலை ஆர்வலர்கள், கலைஞர்கள் இதில் பங்குபற்ற முடியும்.

இதன்போது வெறும் பயிற்சியாக மட்டும் அல்லாது குறித்த துறை சார்ந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் நிகழ்வாகவும் இது அமையவுள்ளது.

இதற்கான தயார்ப்படுத்தல் வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (4-ரி)

# விவசாயிகளுக்கான பதிலை செயலகம் பெற்றுத்தரவேண்டும்

## சம்மேளனத் த்லைவர் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

வெங்காயம், உருளைக் கிழங்குக்கான இறக்குமதியை தடை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 10 கோரிக்கைகளை விவசாயிகள் சார்பில் அரச தலைவரிடம் முன்வைத்தும் பதில் இன்னும் கிடைக்கவில்லை. பதிலைப் பெற்றுத்தர மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் உருளைக்கிழங்குச் செய்கை அறுவடை காலத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அறுவடை இடம்பெறுகின்றது.

இதனால் அறுவடை காலப் பகுதியில் உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு முற்றாகத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் கோரியிருந்தோம்.

யாழ்ப்பாணத்துக்குக் கடந்த 14 ஆம் திகதி வந்திருந்த அரச தலைவரிடம் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் அடங்கிய ஓர் கோரிக்கை மனுவைக் கையளித்தோம். அதற்குப் பதில் கிடைக்கவில்லை. பதிலை மாவட்டச் செயலகமே பெற்றுத்தர வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அரசதலைவர் விவசாயம் தொடர்பில் ஓரிரு விடயங்கள் கூறியது ஆறுதலைத் தந்தாலும் எமது கோரிக்கைக்கு முழுமையான பதிலை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

"மாவட்டச் செயலகம் பதில் வழங்க வேண்டுமென்றால் அரச தலைவரிடம் வழங்கிய கோரிக்கை மனுவின் பிரதியை மாவட்டச் செயலகத்தில் ஒப்படையுங்கள். அதனை உத்தியோகபூர்வமாக அனுப்புவதன் மூலமாகக் கிடைக்கும் பதிலை வழங்க முடியும்" என்று மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (4-101)

# சாராயப் போத்தலுடன் சென்ற உதவியாளர் எச்சரிக்கப்பட்டார்

சாவகச்சேரி, ஒக். 19

விடுதியில் உள்ள நோயாளருக்கு வழங்கவென சாராயத்தை இடுப்பில் மறைத்துக் கொண்டு சென்ற நோயாளியின் உதவியாளரை மருத்துவமனையின் பாதுகாப்பு அலுவலர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த உதவியாளர் வெளியே இரவு உணவு வாங்குவதாகக் கூறிச் சென்றுள்ளார். அவரது நடவடிக்கையை அவதானித்த பாதுகாப்பு அலுவலர்கள் உணவுடன் திரும்பி வரும்போது சோதனையிட்டனர். அவர் உள்ளாடைக்குள் சாராயப் போத்தலை மறைத்துவைத்திருந்தமை தெரியவந்தது. மருத்துவமனைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சாராயப் போத்தலைப் பறித்து அவரை எச்சரித்து அனுப்பினர். (4-9)

# மாம்பழங்களைச் சிறப்பாக பறித்து பழுக்க வைத்து விற்பனை செய்ய உடுவிலில் சிறப்பு வலயம்

## மாகாண விவசாய ஆராய்ச்சி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணத்தில் மரங்களிலிருந்து மாம்பழங்களைச் சிறப்பானமுறையில் பறித்து பழுக்கவைத்து விற்பனை செய்வதற்கு சிறப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்காக முதற்கட்டமாக உடுவிலில் சிறப்பு வலயம் உருவாக்கப்படவுள்ளது என்று மாவட்டச்செயலகத்தில் நேற்றுன்தினம் இடம்பெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அறுவடைக்குப் பிந்திய ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர் சோமகாந்தன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் மாம்பழத்துக்கு அதிக சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதோடு கிருமிநாசினி அற்ற தரமான பழங்களை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தரமான மாம்பழத்தைப் பாதிப்பின்றி பழுக்க வைப்பதால் அவற்றைப் பழுதடையாது அதிக நாள்களுக்குப் பேணிப் பாதுகாக்கலாம். இவற்றினை மேம்படுத்தும் நோக்கில் மாம்பழங்களை மரத்திலிருந்து பறிப்பதில் இருந்து பழுக்க வைத்தல், வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லல், முறையாகப் பேணிப் பாதுகாத்தல் என ஒவ்வொரு விடயத்திலும் சிறப்பு முறைகள் கடைப்பிடிக்கும் வகையில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு செய்வதால் மாம்பழங்களை பார்வைக்கு மிக நேர்த்தியாக, அழகாகவே இறுதி வரையில் வைத்திருக்கலாம். மாங்காய் மரத்தில் இருந்து பறித்தவுடன் அதிலிருந்து பால் வடிந்து பற்றிக்கொள்வதனாலேயே அழகு குறைகின்றது. அதனால் மரத்திலிருந்து பறித்துக் கொண்டு செல்லும் போது பால் வடிவதனைத் தடுக்கும் முறைக்கேற்ப பாதுகாப்புப் பெட்டகம், பழுக்க வைப்பதற்கான இடவசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப் படும். அவை பழுத்தபின்னர் சேதமின்றி இடம் நகர்த்த வசதி கொண்ட பிளாஸ்ரிக் பெட்டிகளும் வழங்கப்படும்.

இவ்வாறான முறை குருநாகலில் ஏற்படுத்தப்பட்டது. தற்போது அந்த இடத்தின் பழத்துக்கு அதிக வரவேற்பு உள்ளது. இதன் காரணமாகவே இரண்டாவது கட்டமாக யாழ்ப்பாணத்தில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இவ்வாறான திட்டத்துக்காக பிளாஸ்ரிக்கூடை, பழுக்க வைக்கும் இட வசதி, பொதி தரம் குறிக்கும் மேசை வசதி, மாங்காய் பிடுங்கு வதற்கான பொறி என்பனவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாம்பழத்துக்கு அறிமுகப்படுத்தவுள்ள இந்தத் திட்டம் அடுத்த கட்டமாக பப்பாசி மற்றும் வாழைப் பழங்களுக்கும் பின்பற்றப்படும். அதற்காக முயற்சிக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் மூலமாக உள்ளூரில் தரமான பழங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வெளிமாவட்டங்களுக்கு மட்டுமன்றி பன்னாட்டுச் சந்தைக்கும் ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் தெரிவித்தனர். (4-101)

ஜி.எப்.ஏ.ரி.எம். செயற்திட்டத்தின் கீழ் அமைத்து

# திறக்கப்படாத 59 கட்டடங்களும் இந்த வருடத்துக்குள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம். ஒக். 19
வடக்கு மாகாணத்தில் ஜி.எப்.எ.ரி.எம் செயற்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடங்கள் திறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 9 கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இன்னும் 59 கட்டடங்கள் இந்த வருட நிறைவுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டுவிடும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

எயிட்ஸ், நீரிழிவு, மலேரியா நோய்களை இல்லாதொழிப்பதற்கான செயற்திட்டமாக 2011ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது 6 ஆண்டுகள் செயல்திட்டமாக அமைந்திருந்தது. ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் ஒதுக்கப்பட்டது. மருத்துவமனைகளில் தேவையின் பொருட்டு பல்வேறு வகையான கட்டட வசதிகள், தளபா. வசதிகள், போன்றன இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்றன. இந்தத் திட்டம் நடப்பு ஆண்டில் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

29 வெளிநோயாளர் பிரிவுகள், 12 சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைகள், 15 சுகாதார வைத்திய அதிகாரி தங்குமிட விடுதிகள், 3 மார்பு நோய் சிகிச்சை நிலையங்கள், மாவட்ட பொதுக் களஞ்சியங்கள், 5 மலேரியா தடை இயக்க அலுவலகங்கள், உட்பட 68 புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இவை தவிர 634 சுகாதாரப் பணி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இது தவிர மருத்துவ உபகரணங்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டன. அமைக்கப்பட்ட கட்டடங்களில் இதுவரை 9 கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன . திறக்கப்படாமல் உள்ள கட்டிடங்கள் திறக்கும் பணிகள் தற்பொழுது வேகமாக நடைபெற்று வருகின்றது என்றார். (ரி)

# சித்த வைத்தியப் பயிற்சிகள் அடுத்த வருடம் அதிகரிக்கும்

## மாகாணப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 19
வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் சித்த வைத்தியம் சார்ந்த பயிற்சி நெறிகளை அதிகம் வழங்குவதற்கும், புலமைப் பரிசில் மூலமாக வெளிநாடுகளுக்குப் பயிற்சி நெறிக்கு அனுப்பும் செயற்திட்டங்களை ஊக்கப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சித்த வைத்தியத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி. சி.துரைரட்ணம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் சித்த வைத்தியம் சார்ந்த துறையில் உள்ளவர்களுக்கு அவர்களின் ஆற்றலை விருத்தி செய்யவதற்கு திணைக்களத்தினால் பல்வேறு பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுதவிர ஏனைய நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறை நிகழ்வுகளிலும் நாம் பங்குபற்றி வருகின்றோம். இதன் மூலமாக சிறந்த அனுபவங்களைப் பெறக் கூடியதாக உள்ளது.

அடுத்த ஆண்டில் இவ்வாறான விடயங்களில் அதிக முக்கியத்துவத்தை வழங்கவுள்ளோம்.

சித்த மருந்துகளை தயாரித்தல், சிறப்பான மருந்து தயாரிப்பு, புற்றுநோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம், வதிவிட யோகா பயிற்சி நெறி, பஞ்சகர்ம பயிற்சி நெறி, மூலிகை மருந்துகளுக்கான தரக் கட்டுப்பாட்டுக்கான பயிற்சி, சித்த மருத்துவ ஏடுகளை வாசித்தறிதல் ஆகிய பயிற்சி நெறிகளில் இதுவரை 40 பேர் வரை பங்குபற்றி பயன் பெற்றுள்ளனர்.

பன்னாட்டு ரீதியான தொடர்புகளை பேணுவதற்காகச் சிறப்பான புலமைப் பரிசில் மூலம் கேரளா மற்றும் கொல்கத்தாவில் நடைபெறும் மாநாடுகளில் நாம் பங்குபற்றி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் பயனுள்ளதாக அமைகின்றன. ஆகவே அடுத்த ஆண்டில் இவ்வாறான செயற்திட்டங்களை அதிகமாக நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (4-ரி)

## 7 பேருக்கு இலவச திருமணம்

யாழ்ப்பாணம், ஒக்.19
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி தலைமையில் 7 பேருக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னி மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் திருமணம் செய்ய முடியாத நிலையில் உள்ள 7 பேருக்கு இவ்வாறு திருமணம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி முதல் தண்ணீர் ஊற்று பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தலைமையில் லண்டன் சைவ முன்னேற்றக் கழகத்தின் அனுசரணையில் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஒழுங்படுத்தலில் திருமணம் நடத்திவைக்கப்படவுள்ளது.

திருமணத்தின் போது ஒரு லட்சம் ரூபா பணம் அன்பளிப்பாக தம்பதிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# ஒப்பந்தகாரர்களால் கட்டுமானங்கள் முடக்கம் தனி வேலைப்பிரிவை ஆரம்பிக்க உத்தேசம்

## மாவட்டச் செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல ஒப்பந்த வேலைகள் இடம்பெறுகின்றபோதும் அவற்றில் 35 வீதமான பணிகள் மிக மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன. வேலைகளைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்களே இவ்வாறான தாமதத்துக்குக் காரணங்களாக இருக்கின்றனர். அதனால் இத்தகையவர்களுக்கு ஒப்பந்தம் வழங்குவதா அல்லது தனியானதோர் வேலைப்பகுதியை உருவாக்குவதா என்பது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் இன்று பாடசாலைகள், குளங்கள் , வீதிவேலைகள், கட்டடங்கள் என 103 பணிகள் இடம்பெறுகின்றன.

வருடத்தின் இறுதிப்பகுதியை நெருங்குகின்றோம். இருப்பினும் 37 பணிகள் மந்தகதியிலேயே நடக்கின்றன. 40 பணிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 26 பணிகள் ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யும் வேகத்தில் இடம்பெறுகின்றன. ஏனைய திணைக்களங்கள் ஊடாக திட்டமிட்ட ஏனைய பணிகளும் இடம்பெறுகின்றன.

மாவட்டச்செயலகத்தின் ஊடாக இடம்பெறும் பணிகளில் மந்த கதியில் இடம்பெறும் திட்டங்களின் தாமதங்களுக்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கில் ஓர் ஆய்வில் ஈடுபட்டோம்.

அதன்போது தாமதத்துக்கு ஒப்பந்த நிறுவனங்களே காரணம் எனக் கண்டறியப்பட்டது. அதாவது ஒரே நிறுவனங்களே அதிக பணிகளை ஒப்பந்தம் எடுப்பதனால் தாமதம் அடைகின்றது.

இத்தகைய பணிகளை எடுக்கும் ஒப்பந்த நிறுவனங்கள் உப ஒப்பந்தங்களை பிறருக்கு வழங்குவது, பணிக்குரிய ஊழியர்களை போதுமானதாக கொண்டிருக்காதமை போன்ற பல காரணங்களால் பணிகள் தாமதமடைகின்றன.

இவ்வாறான தாமதங்களை பேசித் தீர்த்து அதற்கான மாற்று ஏற்பாடு உண்டா என்று ஆராய்வதற்காக அழைக்கின்றபோதும் ஒப்பந்த நிறுவனங்கள் வருவதில்லை.

பெரிய ஒப்பந்த நிறுவனங்கள் போலிப் பெயர்களில் பல நிறுவனப் பதிவுகளை வைத்திருக்கின்றன. இவ்வாறான பல காரணங்களால் மாவட்டத்தின் அபிவிருத்தி தாமதமடைவதனை அனுமதிக்க முடியாது.

இனிவரும் காலங்களில் ஒப்பந்தம் கோரப்படும்போது அல்லது இறுதித் தீர்மானத்தின்போது கடந்த காலத்தில் ஒப்பந்தங்களின்போது பணியில் தாமதம் ஏற்படுத்தியிருப்பவர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்குவதனைத் தவிர்ப்பதா அல்லது தனியானதோர் வேலைப்பகுதியை உருவாக்குவதா என்பது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது.

பணியின் தாமதத்துக்கு அரச அதிகாரிகளும் திணைக்களங்களுமே காரணம் என்ற தவறான கருத்து மேலோங்க முனைகின்றது.

இதனால் பணிகளில் தாமதம் அடைகின்ற ஒப்பந்தகாரர்கள் அனைவரும் உடனடியாக மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு சீர்செய்வது சிறந்தது - என்றார். (4 -101)

## மாகாணக் கல்வி அமைச்சின் இணையத்தில் பழைய தரவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 19
வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வலய பணிப்பாளர்கள் ஓய்வு பெற்ற பணிப்பாளர்களின் விவரங்களே தற்போதும் பதிவேற்றப்பட்டுள்ளன.

புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பில் எந்தவொரு தகவல்களும் பதிவேற்றப்படவில்லை என்று கல்வித் துறையினர் குற்றஞ்சாட்டு கின்றனர்.

வவுனியா தெற்கு வலயத்துக்கு ஒருவருடத்துக்கு முன்னர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கல்விப்பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணனின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படவில்லை. முன்னைய பதிவேற்றங்களே தற்போதும் காணப்படுகின்றன.

ஆனால் புதிய கல்வி அமைச்சராக பதிவி நியமிக்கப்பட்ட கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் இணையத்தளங்களூடாக தகவல்களைப் பெறுவோர் தற்போதும் ஓய்வு பெற்றவர்களின் விவரங்களையே சேகரிப்பதுடன் அவர்களின் பெயருக்கே சேவைகளையும் மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது என்று கூறப்படுகிறது.

எனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சு தமது உத்யோகபூர்வ இணையத்தளங்களில் தற்போது கடமையிலுள்ள வலயகல்விப்பணிப்பாளர்களின் விவரங்களை உள்ளடக்கி மாற்றம் செய்யவேண்டும் என்று கல்வித்துறையினர் கோருகின்றனர். (4)

# தமிழருக்கான தீர்வு தரப்படாவிட்டால் மீளவும் தனியாகவே நிற்கவேண்டிவரும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 19
சிங்கள தேசம் தமிழர்களின் சமாதானக் கரங்களை எட்டி உதைக்குமேயானால், தமிழர்களுக்குரிய தீர்வுகள் உரிய முறையில் வழங்கப்படாதுபோனால் நிச்சயமாக நாம் மீண்டெழுந்து மீண்டும் தனியாக நிற்கவேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுவோம். இதுவே நிதர்சனம்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு சிலாவத்தை இளம்பறவை விளையாட்டு கழகம் நடத்திய மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து நாம் மீண்டெழுவோமா என்று நாமே சந்தேகப்பட்ட காலம் இருந்தது. ஆனால் இன்றோ எமது இனம் அதிலிருந்து சமாதானமான சூழலில் வாழ்வதற்காக அரசியல் யாப்பு மாற்றம் தயார் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே எமக்குத் தேவையான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், வடகிழக்கு இணைந்த எமது பூர்வீக பிரதேசம் என்பன ஒன்றிணைந்து எமக்குத் தீர்வு கிடைக்குமா? இல்லையா? என்ற ஒரு இக்கட்டான நிலையில் இன்று நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக நாம் மீண்டெழுந்து தனியாக நிற்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுவோம் என்பது நிதர்சனம்.

எந்தவொரு இனமும் தன்னைத் தக்கவைத்துக்கொள்வதற்காக எதிர்த்து நிற்கும். அதே போல் எமது இனமும் அடக்கப்பட்டது. அந்த அடக்குமுறைக்கு எதிராக போர் புரிந்த எமது மாவீரர்கள் தங்களது இன்னுயிர்களை ஈந்து இன்று, தமிழர்கள் ஒரு விடுதலையை வேண்டி நிற்கும் இனமாக உலகத்துக்கு அடையாளம் காட்டி நிற்க வைத்திருக்கிறார்கள். அடையாளம் காட்டிச் சென்றிருக்கிறார்கள். எனவே அவர்களின் இழப்புகள் ஒருநாளும் வீண்போகாது எனத் உறுதியாக நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (4)

# தேர்தல் செலவினங்களை குறைக்கும் சட்டவரைவு

## மைத்திரியின் அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 19

தேர்தல் செலவினங்களைக் குறைப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது நீதியான தேர்தலொன்றை எதிர்பார்க்கும் மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தத் தேர்தல்களாக இருந்தாலும் அது நீதியானதாகவும் சாதாரணமானதாகவும் அத்துடன் தேர்தல் செலவினங்களைக் குறைப்பதற்கும் தேவையான சட்ட திட்டங்களை ஏற்படுத்தும் நோக்கத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தியா உள்பட பல நாடுகள் மக்களின் ஆணையைச் சரியான முறையில் தெரிவிப்பதற்குத் தேர்தல் செலவுகளைக் கட்டடுப்படுத்த சட்டத்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இது வாக்களிப்பு தினத்தில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுபடுத்த உதவியாக இருக்கின்றது.



தேர்தல் சட்டத்திட்டங்களை கடினப்படுத்துவது தொடர்பாக 2013ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற தேர்தல்களின்போது தேர்தல்கள் ஆணையாளரினால் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் இடம்பெற்ற கூட்டங்களின்போது அனைத்து கட்சிகளினாலும் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நடைமுறைக்கு வரவில்லை.

தேர்தலை நடத்துவதாக இருந்தால் கட்டாயம் தேர்தல் செலவுகளுக்கு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தவேண்டும். தேர்தல் மோசடிகளுக்கு வேட்பாளர்களின் அதிகூடிய செலவினமும் காரணமாகும். தேர்தல் தொடர்பாக பன்னாட்டு நாடுகளின் சட்டதிட்டங்களை ஆராய்ந்தே அரச தலைவர் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளார். தேர்தல் செலவினங்களை கட்டுப்படுத்த கட்சிகளின் வேட்பாளர் ஒருவர் செலவிட முடியுமான தொகை வரையறுக்கப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார். அவரின் யோசனைக்கும் அரச தலைவர் இணங்குவதாக தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவைப்போன்று தேர்தல் சட்டங்களை மேற்கொண்டு எதிர்வரக்கூடிய தேர்தல்களை நீதியானதும் சாதாரணதுமான தேர்தல்களை நடத்துவதற்கும் மக்களின் உண்மையான ஆணையை தெரிவிப்பதற்கு தேவையான நிலவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் அரச தலைவரால் முன்வைக் கப்பட்ட அமைச்சர வைப் பத்தி ரத்துக்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது - என்றார். (5.31)

---

## மரணஅறிவித்தல்

### வினாசித்தம்பி கணேசலிங்கம்

(ஆச்சாரியார்)



தோற்றம் 14.05.1946 — மறைவு 15.10.2017

யாழ்ப்பாணம் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா கோவிற்குளத்தை வதிவிடமாகவும்கொண்ட வினாசித்தம்பி கணேசலிங்கம் (ஆச்சாரியார்) 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்ப்பராணி யின் அன்புக் கணவரும், ஜெனந்தினி, சிவதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (பாலசுந்தரம்) ;சிவராசா, காஞ்சனமாலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்ஷன், பிரசாந் ஆகியோரின் அன்பு மாமனாரும், துதிலட்சுமி, பவானி, தம்பிஐயா, தனலட்சுமி, இராசலிங்கம், ஜெயகேந்திரவதி, நேசமலர் ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், அர்வின், கிறிஷ்ஷன், அஸ்னா, அனாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் கோவிற்குளம் சின்னப்புதுக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25B கோயில்குளம்,
சின்னப்புதுக்குளம், வவுனியா

தகவல்
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



மண்ணில் 19 . 10 . 1934

விண்ணில் 15 . 10 . 2017

பண்டிதர்

### மனுவேல்பிள்ளை செல்வராஜா அலெக்ஸ்சாந்தர்

(முன்னாள் விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை இயக்குநர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை, இயக்குநர் பனம் பொருள்
அபிவிருத்திச் சபை, பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தொழில்க்கல்வி, தமிழ் முதன்மை ஆசிரியர் கனடா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் அவர்கள் 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை சண்முகம் - றோசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஏரோனி - மதலேனா தம்பதியரின் மருமகனும், மேரி மெற்றில்டா அவர்களின் பாசமிகு கணவரும், திருசிங்கராஜா, காலஞ்சென்றவர்வளான தேவமலர், நீற்றம்மா மற்றும் செல்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரியருள் ராஜன், அன்ரன் கீதராஜ், ஆசிஜெயராஜா, யோ மதனராஜா, மரிய ராஜினி, யூட சசிகரன், யாழினி திரேஸ் ஆகி யோரின் பாசமிகு தந்தையும், அன்ரன் குணராஜா, மேசி கங்கா, டயஸ் தனராஜா ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற துரைராஜா, தியாகராஜா மற்றும் கேதாரம் ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரெலா, சுகந்தி, வாணி, டொறிஸ், அருள்குமார், குயின்சி, திருக்குமரன், உமா, காலஞ்சென்றவர்களான வசந்தன், வதனி மற்றும் காமினி, மாலினி வதனன் நளாயினி, வண்ணன், கௌரி, விஜிதா, தவதர்சனன், குமரன், யோதிராஜா ஆகியோரின் மாமனும், கத்தலின், றிச்சாட்ஸ், ஏஞ்சலின், யாதுலன், இந்துஜா, கதாறினி, யாதவன், அகிலன், அனுஜன், அச்சுதன், அனன்யா, கிறிஸ்ரன்,பேபியன், கிறிசா, டாறா, அஜிதன், ஆர்தி, சிறிகா, சிறிஜா, சினேஜா ஆகியோரின் அப்பப்பாவும், அஜந்தா, மித்திரன், மாறன்,தூபிகா தூவீபன், துபிஷன் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் (21.10.2017) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| Service Information: | Saturday October 21st, 2017, 9:45am<br>St Thomas the Apostle Roman Catholic Church<br>14 Highgate Drive, Markham, Ontario, Canada |
| Interment Information:<br>(followed by service) | Christ the King Catholic Cemetery<br>7770 Steeles Road, Markham, ON. |

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

+1 416 743 3491, +1 647 701 8849, +1 647 295 8228

---

## மரண அறிவித்தல்



மண்ணில் 01 . 08 . 1932

விண்ணில் 16 . 10 . 2017

### திருமதி இராசம்மா பொன்னுத்துரை

ஊரெழு மேற்கை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னுத்துரை 16.10.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் துரைராசாவின் பாசமிகு சகோதரியும், சின்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செல்லத்துரை, அப்புத்துரை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நேசமலர், அமிர்தலிங்கம், இராசமலர் ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வநாயகம், இரஞ்ஜினி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் சசிதன் - தருசீலா, சர்மிலா - சசிகரன், சுதர்சன் - நளாயினி, சர்மினி - மயூரன், பிருந்தா, மதுரா - சாரங்கன், மதுமியா, மயூரா ஆசியோரின் அன்புப் பேர்த்தியும், அனிஷ், ஹரீன், சாய்வர்ஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளான் இந்து மயானத்துக்கு எடுத்துசசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

0217904834

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
30 • 05 • 1973



ஆண்டவன் அடியில்
29 • 10 • 2016

## அமரர் நடராசா நவலோகன்

(முன்னாள் சமுர்த்தி உத்தியோகத்தர்)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை என் மனம்
நடமாடும் வீட்டில் படமாகிப் போனீர்கள் -
ஆனாலும் எம் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 • 12 • 1960



மறைவு
30 • 10 • 2016

## அமரர் இராஜரட்ணம் இராஜசிங்கம்

திதி: அமவாசை 19.10.2017




பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எமக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

Curch Road,
Chankanai.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் நாகராசா

சுருவிலைப் பிறப்பிடமாகவும் 44/1 கண்டி வீதி, மாம்பழம் சந்தி அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நாகராசா நேற்று (18.10.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் மதிவதனியின் அன்புக் கணவரும் சகிலா(ஆசிரியை - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), மஞ்சுளா(ஆசிரியை - யாழ்.மத்திய கல்லூரி), தயானந்தி, மதுஷன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரன் (அதிபர் - யா/சுருவில் றோ.க.த.க பாடசாலை), சசிகரன்(உரிமையாளர், சசி வைண்டிங் - யாழ்ப்பாணம்), நந்தகுமார்(வியாபாரம்) ஆகியோரின் அன்பு மாமனும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி இராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி நந்தகுமார்(வர்த்தகர் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அற்புதவதனி(பிரான்ஸ்), திருச்செல்வம் காலஞ்சென்ற அருட்செல்வம் மற்றும் இந்திரவதனி ஆகியோரின் மைத்துனரும் அபிவர்ஷினி, கஜவர்ஷன், நிதுஷன், சிவானுஜா, தர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

441/1, கண்டி வீதி,
அரியாலை (மாம்பழம் சந்தி)

தகவல்:
குடும்பத்தினர்.

# 30ஆவது ஆண்டு நீங்கா நினைவலையில்......

அமரர்
## சிவராசா பராசக்தி

(முன்னாள் ஆசிரியை
யாழ். சன் மார்க்க
மகாவித்தியாலயம்)

வேலணையில் பிறப்பு
09.10.1928

கல்வியங்காட்டில் இறப்பு
21.10.1987



அம்மா எம்மை எண்ணி ஆயிரம் கனவுகள் கண்டீர்
அவையாவும் நிறைவேறிப்போகும் முன்னே
அப்பாவுடன் சென்றது ஏனோ?
எமக்காகவே உயிர் வாழ்ந்துஉயிரையும் அர்ப்பணித்தீர்
எம் கனவில் கூட நிம்மதில்லை
இழந்து நாம் தவிக்கின்றோம் என் செய்வோம் அம்மா!
என்ற எம் தெய்வம் இல்லாத எம் வாழ்வும்

உங்கள் நினைவுடன் வாழும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவசக்தி - பாலகுமார் (லண்டன்),
சிவகௌரி- சாந்தலிங்கம் (Swiss)
சிவகுமார் - வினோதினி (யாழ்).

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்வி சதுஷா சுந்தரலிங்கம்



அன்னை மடியில்
02.09.2002

ஆண்டவன் அடியில்
17.10.2013

நான்காண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
சி.கந்தையா (பேரன்), க.வாமதேவி (பேர்த்தி),
சதுஷன் (தம்பி), மாமன்மார், அன்ரிமார்.

# மரண அறிவித்தல்

## திருமதி மேரி றோசலின் ஜெயராணி ஜோர்ஜ்



தோற்றம் 14.01.1932
மறைவு 17.10.2017

கற்கோவளம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 30, சுவாட்ஸ்லேன், சுண்டிக்குளி யாழ்ப்பணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றோசலின் ஜெயராணி ஜோர்ஜ் 17.10.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சீதேவன் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஞானமுத்து ஜோர்ஜ் (ஓய்வு பெற்ற பிரதம கூட்டுறவு பரிசோதகர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவயோகத்தின் சகோதரியும் செபஸ் மகேந்திரகுமார்(கனடா), ஜெசி சாந்தகுமாரி, கிங்ஸ்லி ரவீந்திரகுமார்(கனடா) காலஞ்சென்ற பிறின்ஸ் சுவேந்திரகுமார் (கனடா), இராஜகுமாரி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி(கனடா), அற்புதகுமார் (ஓய்வு பெற்ற மதுவரி சார்ஜன் மேஜர்), கௌரி(கனடா), விஜி (கனடா), ஞானானந்தம்(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் பைரவி, மகிழன், ஆரபி, மேசி அருளினி, றெஜி அருள்ராஜ், குளோறியா நிரஞ்சினி, நிறோசன், றொசானா, ஜெறோமி, ஜோடன், ஜெனலின் காலஞ்சென்ற டிலானி மற்றும் டினேஸ், டெனிக், குமணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(20.10.2017) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்க ஆராதனைக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, சுவாட்ஸ்லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: அற்புதகுமார்
(மருமகன்)

021 222 8009



# பிள்ளைகளை அச்சப்படுத்துகின்றனர் பெற்றோர்கள்

*அரச தலைவர் மைத்திரிபால தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 19

பிள்ளைகள் சித்தியடையும்போது மகிழ்ச்சியடையும் அதேவேளை பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் மிகவும் மோசமாக அவர்களைத் துன்புறுத்துவதில் பெரும்பாலான பெற்றோர்கள் ஈடுபடுகின்றனர். பெறுபேறு கிடைக்கும் நாள் நெருங்கும்போது பிள்ளைகள் பெரும் அச்சத்துடன் இருப்பதனையும் காணமுடிகிறது. பிள்ளைகளுக்குக் கற்பிப்பது போன்றே பரீட்சை பெறுபேறு வெளிவந்த பின்னர் பிள்ளைகளுடன் நடந்து கொள்ள வேண்டிய முறை தொடர்பில் பெற்றோரைத் தெளிவுபடுத்தும் செயற்திட்டங்கள் அனைத்துப் பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு ரோயல்க் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதர்களது ஒழுக்கம் தொடர்பான பிரச்சினையே இன்று சமூக முன்னேற்றத்திற்கு பெரும் சவாலாக இருக்கிறது. எமது நாட்டில் பிள்ளைகளுக்குஒழுக்கத்தைப்போதிப்பதற்கு முன்னதாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவரும் போது பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் போதிக்க வேண்டியுள்ளது.

பொருளாதாரப் போட்டிமிக்க உலகுக்குப் பிள்ளைகளைத் தயார்செய்வது ஒரு சவாலாகவே உள்ளது.

சமூகத்தில் வேகமாகப் பரவி வரும் போதைப் பொருள்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். ஒரு காலத்தில் நகர்ப்புறங்களிலிருந்த பிரச்சினைகள் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இப்போது கிராமப்புறங்களிலும் பரவியுள்ளன.

போதைப் பொருள்களைப் பல்கலைக்கழகங்களுக்குள் கொண்டுவந்து இலவசமாக விநியோகிக்கும் நிலை இருப்பதனால் நாம் எவ்வாறு பிள்ளைகளைப் பாதுகாப்பது என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்னிடம் வினவினார். அந்தப் பின்னணியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பரந்த சமூகப் பொறுப்பு இருக்கிறது. அரசு, பொதுமக்கள், அரச அலுவலர்கள் மற்றும் மாணவர்களின் கூட்டுப்பொறுப்புடனான செயற்பாடு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. பிள்ளைகள் பாடசாலை நேரத்திலேயே பாதுகாப்பாக இருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

பாடசாலைக்கு வெளியே பெற்றோரின் பொறுப்பில் இருக்கும் காலத்திலேயே பிள்ளைகள் பாதுகாப்பில்லாமல் இருப்பது தெரியவருகிறது. தொழில்நுட்பம் காரணமாக உலகம் முன்னேறியிருந்தாலும் மனிதனால் கட்டுப்படுத்த முடியாத பல விடயங்கள் இன்னமும் இருக்கின்றன - என்றார். (5)

# பாகிஸ்தானையும் சகோதரனாக விளிக்கிறது இலங்கை அரசு



கொழும்பு, ஒக். 19
போர்க் காலத்தில் இலங்கையின் உண்மையான நண்பனாகவும், சகோதரனாகவும் பாகிஸ்தான் உதவிகளை வழங்கியது. ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் பாகிஸ்தான் ஆதரவு வழங்கியது. இவற்றுக்கு நன்றி தெரிவிப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இந்தியாவையே இலங்கை அரசு இதுவரையில் சகோதரனாக விளித்து வந்தது. இப்போது பாகிஸ்தானையும் சகோதரனாக இலங்கை அரச தலைவர் மைத்திரிபால விளித்துக் கூறியுள்ளார்.
இரண்டு நாள்கள் பயணமாக கொழும்பு வந்துள்ள பாகிஸ்தான் அயலுறவுத்துறைச் செயலர் தெஹ்மினா ஜன்ஜுவாவை அரச தலைவர் மைத்திரிபால நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் சீனி மற்றும் சிமெந்து உற்பத்திகளில் முதலீடு செய்ய முன்வருமாறும் மைத்திரி பாகிஸ்தான் அயலுறவுத்துறைச் செயலரிடம் அழைப்பு விடுத்தார். சீனி, மற்றும் சிமெந்துக்கு இலங்கையில் அதிக தேவை இருப்பதாகவும் இலங்கைக்குத் தேவையான சீனியில் 20 வீதமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் மைத்திரி தெரிவித்தார்.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை நினைவுபடுத்திய மைத்திரி, இந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
அடுத்த சார்க் மாநாட்டை பாகிஸ்தானில் நடத்துவதற்கு இலங்கை ஆதரவு வழங்கும் என்றும், பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்குச் சார்க் அமைப்பு முக்கியம் என்றும் மைத்திரி தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவதாக உறுதியளித்த பாகிஸ்தான் அயலுறவுத்துறைச் செயலர், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்தத் தமது நாடு உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.
கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாகத் தாம் உரையாற்றியமை குறித்து மகிழ்ச்சியடையவதாகவும், அவர் குறிப்பிட்டார்.
கால்நடை மற்றும் பால் உற்பத்தித் துறைகளில் இலங்கைக்கு பாகிஸ்தான் உதவிகளை வழங்கும் என்றும், அதுகுறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
தேவைப்பட்டால், இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உதவப் பாகிஸ்தான் தயாராக இருப்பதாக அந்த நாட்டின் அயலுறவுத் துறைச் செயலர் கூறியுள்ளார். (5)

MEMORY MAP
நினைவலைகள்
இரக்கம், பொறுமை ஆகியவை மானிடத்தின் பிரிக்கமுடியா பண்புகள். இவற்றின் மூலம் ஒரு வன்முறையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்போவோம்
நினைவலைகள் : வியாழன் @ 6.00pm - 6.30pm @ Channel Eye (Nethra )- 19th October 2017 and SLBC Tamil National Service (101.1 / 101.3FM)
on Friday @ 7.30pm - 8.00pm on 20th October 2017

யாழ் நகரில் இயங்கும் முன்னணி
ANNAI NAGAA FOOD City
Food City ஆன
அன்னை நாகா
பூட் சிற்றி
அசத்தலான
பண்டிகைக்கால
விசேட சலுகைகள்



17.10.2017
தொடக்கம்
23.10.2017 வரை
ரூ.5000/= இற்கும் மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.



அன்னை நாகா
பூட் சிற்றி
175,K.K.S.Road. Jaffna.
021 739 0192,
021 739 0194
341, Pointpedro Road, Nallur.
021 221 7515

## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
### நிறுவுநர் நினைவுநாளும்
### பரிசளிப்பு விழாவும் - 2017

இடம் : பாடசாலை மண்டபம்
காலம்: 19.10.2017 (வியாழக்கிழமை)
நேரம்: பி.ப 1.30 மணி

தலைவர்
**திரு.வ.நந்தீஸ்வரன் (அதிபர்)**
பிரதம விருந்தினர்
**கௌரவ ஈ.சரவணபவன்**
(யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)
சிறப்பு விருந்தினர்
**திரு.இ.வாகீசன்**
(உள மத்துவ சமூக சேவையாளர் - போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்)
கௌரவ விருந்தினர்
**திரு.சு.தேவமனோகரன்**
(திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)
நினைவுப் பேருரை
**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**
(முன்னாள் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பரிசு வழங்குதல்
**திருமதி யசோதை சரவணபவன்**
(நிர்வாக இயக்குநர். உதயன் குழுமம்)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடு / கட்டடம் தேவை

அறிவியல் நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் / கட்டடங்கள் கிளிநொச்சி திருமுருகண்டி (கண்டி) வீதியை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீட்டை / கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 02.11.2017 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர் / நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடதுமேல் மூலையில் **"யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பபீட மாணவர்களுக்கான விடுதி வீடு / கட்டடம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.** பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

* தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517
பதிவாளர்.

---

..............................
..............................

உதவிப் பதிவாளர்/நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பபீட மாணவர்களின் உபயோகத்திற்கான விடுதி வீடு / கட்டடம்

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் .................... ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை / கட்டடத்தை பல்கலைக் கழகத்திற்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விவரங்கள்**

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
.......................................................
.......................................................
.......................................................
2) வீடு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரதுநிரந்தரமுகவரியும்
.......................................................
.......................................................
.......................................................
3) தொடர்புகொள்ளவேண்டியவரின் பெயரும் முகவரியும்,தொலைபேசி இலக்கமும்
பெயர்:.......................................................
முகவரி:
.......................................................
.......................................................
தொலைபேசி இல: .......................................
4) (a) வீட்டின்/கட்டடத்தின்பரப்பளவு (சதுரஅடி) ..............
(b) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு......
5) அறைகளின் எண்ணிக்கை..............................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ......................
மலசல கூடங்களின் எண்ணிக்கை.........................
6) மின்சார வசதி உண்டு/இல்லை..........................
விவரம் .......................................................
7) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர் விவரம்
.......................................................
8) எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை..........................
(வீடு/கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)
9) வாடகைக்குத் தரக்கூடிய கால அளவு......................
10) வேறு யாதாயினும் விடயங்கள் / வசதிகள் / கட்டுப்பாடுகள் / நிபந்தனைகள் (இருப்பின்)
.......................................................
.......................................................
.......................................................

திகதி.................. ..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

# தாமதமாகும் உள்ளூராட்சித் தேர்தல்: கண்காணிப்பு அமைப்புகள் அதிருப்தி

கொழும்பு, ஒக். 19

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் ஏற்பட்டுள்ள இழுபறிகள் குறித்து, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

பவ்ரல், கபே, தேசியத் தேர்தல் கண்காணிப்பு நிலையம், சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கான அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரியவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்து அதிருப்தி வெளியிட்டனர்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடாத வரையில் தேர்தலுக்கான நடவடிக்கைகளைத் தம்மால் முன்னெடுக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

'இது தொடர்பான வரைவு வர்த்தமானி என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை வெளியிட வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சுக்கே உரியது. வர்த்தமானி வெளியிடப்பட்ட பின்னர் தேர்தலை நடத்துவதற்கு 50 -75 நாள்கள் கால அவகாசம் எமக்குத் தேவைப்படும்.

அடுத்த ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி வரவுள்ள தைப்பொங்கலுக்கு முன்னர் தேர்தலை நடத்த எந்தத் தடையும் இல்லை.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கும் போதும், ஆண்டின் கடைசி நான்கு நாள்களிலும், அரச பணியாளர்களைத் தேர்தல் கடமைக்குப் பயன்படுத்த முடியாது என்பதால் அந்தக் காலப்பகுதியில் தேர்தலை நடத்த முடியாது என்பதே எனது கரிசனை. அதற்குப் பின்னர் எந்த நாளிலும் தேர்தலை நடத்தலாம், என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (5)

## கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## மீள்குடியேற்ற அமைச்சுக்காக

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, சார்பில் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA/ICTAD**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்திற்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக்கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் முகவரியில் மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

**மீள்குடியேற்ற பிரிவு,**
**மாவட்ட செயலகம்**
**கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**Tel: 021-2212631 / 021-2224029**

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 19.10.2017 முதல் 31.10.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான** காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. **கேள்விகள் 01.11.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 25.10.2017** அன்று **10.00** மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மீளளிக் கப்படாத தொகை (ரூபா) | மதிப் பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப் பந்த காலம் | தேவை யான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| JF/RES/RD/.XVI/2017/I | சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், பலைக்கட்டை வீதி, மாதகல்-550 M | 2000.00 | 3.56. | 60 நாள்கள் | C8 அல்லது C7 (வீதி) | 36,000.00 | 16.01.2018 வரை |
| JF/RES/RD/XVI/2017/II | சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், சகஜபுரம் கிராம RDS வீதி, மாதகல் - 610 M | 3500.00 | 5.10 | 60 நாள்கள் | C6 அல்லது C7 (வீதி) | 51,000.00 | 16.01.2018 வரை |
| JF/RES/RD/XVI/2017/III | தெல்லிப்பளை பிரதேச செயலகம், கட்டுவன் இணைந்த வீதி-550 M | 2000.00 | 3.48 | 60 நாள்கள் | C8 அல்லது C7 (வீதி) | 35,000.00 | 16.01.2018 வரை |
| JF/RES/RD/XVI/2017/IV | தெல்லிப்பளை பிரதேச செயலகம், அம்மன் விக்னேஸ்வரா வீதி-2000M | 3500.00 | 14.30 | 60 நாள்கள் | C5 அல்லது C6 (வீதி) | 140,000.00 | 16.01.2018 வரை |
| JF/RES/RD/XVI/2017/V | தெல்லிப்பளை பிரதேச செயலகம், சேகரம் வீதி தையிட்டி -500 M | 2000.00 | 3.58 | 60 நாள்கள | C8 அல்லது C7 (வீதி) | 36,000.00 | 16.01.2018 வரை |

**நா.வேதநாயகன்**
**மாவட்ட செயலாளர்**
**அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்,**

## உள்ளூராட்சித் தேர்தல் இழுபறியில்

கொழும்பு, ஒக். 19

நுவரெலிய மாவட்டத்தில் புதிய பிரதேச சபையை உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள இழுபறியினால், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் வகையில், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை வரையறை செய்யும் வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்படும் என்று அரசு கூறியிருந்தது. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரே தேர்தல் ஆணைக்குழுவினால் வேட்புமனுக்களைக் கோர முடியும்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரங்களை உள்ளடக்கிய சிறப்பு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

நுவரெலிய மாவட்டத்தில் உள்ள அம்பேகமுவ பிரதேச சபையை பிரிக்க வேண்டும் என்று மனோ கணேசன் தலைமையிலான மலையகக் கட்சிகளின் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகிறது. அரசு இதற்கு இணக்கம் வெளியிட்டிருந்தது. வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் வர்த்தமானியை வெளியிடக் கூடாது என்று அரசிடம் அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலர் கமல் பத்மசிறி, நுவரெலிய மாவட்டத்தில் அம்பேகமுவ பிரதேச சபையை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகளிடம் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இதனை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம். பல பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

நுவரெலிய மாவட்டத்தில் அம்பேகமுவ, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட பிரதேசமாகும். அதிகளவு மக்கள் தொகை கொண்ட பெரிய தனியொரு பிரதேச செயலர் பிரிவு. இதனைப் பிரிக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் கோருகின்றன. அதனைக் கவனத்தில் கொண்டுள்ளோம். வர்த்தமானியில் திருத்தங்கள் செய்வதனால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக உள்ளூராட்சிச் சபைகளின் வாக்களிப்புப் பிரிவில் சுமார் 50 ஆயிரம் வாக்காளர்களே இருப்பர்.

ஆனால், அம்பேகமுவவில், 2012ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி 2 லட்சத்து 5 ஆயிரத்து 723 பேர் வசிக்கின்றனர், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## தமிழீழத்தை உருவாக்குவதே சம்பந்தனின் ஒரே நோக்கம்

*மூத்த அரசியல் ஆய்வாளர் மொஹான் சமரநாயக்க*

புதிய அரசமைப்பின் ஊடாக கூட்டாட்சியை உள்ளடக்கி மீண்டும் புலிகளை உயிர்ப்பிக்கவே சம்பந்தன் முற்படுகின்றார். தமிழீழம் நாட்டில் தோற்றுவிக்கப்படுவதே சம்பந்தனின் முற்று முழுதான நோக்கமாக இருக்கின்றது. அரச தலைவரும் இந்த விடயத்தில் மௌனமாக இருப்பது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு மூத்த அரசியல் ஆய்வாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

தேசிய ஒழுங்கமைப்பு ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு நாட்டின் தேசியத்துக்கும், இறையாண்மைக்கும் சனநாயகத்துக்கும் ஏன் முழு நாட்டு மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்கவேண்டும். அவ்வாறல்லாத அரசமைப்பு நாட்டின் குந்தகத்துக்கே வழிசமைக்கும். நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய அரசமைப்பு யோசனைகளைக் கைவிட்டு மக்களுக்கு உறுதியளித்த அரசமைப்புத் திருத்தத்தை மட்டும் செய்வதற்கான யோசனைகளை முன்வைக்குமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அரசிடம் கோரியிருப்பதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அவரது மகிந்த அணியில் சிலருக்கு புதிய அரசமைப்பு தொடர்பில் போதிய தெளிவின்மையை அவர்களது கருத்துக்களிலிருந்து அவதானிக்க முடிகின்றது.

2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தம் செய்தது தவறு என்றே அன்றே சுட்டிக்காட்டினேன். ஐக்கிய தேசியக் கட்சியின் சுயரூபம் அன்றே தெரிந்தது.

சம்பந்தன் தலைமையிலான எதிர்க்கட்சி அரசு விடும் தவறுகளை கண்டும் காணாமலும் இருக்கின்றது. புதிய அரசமைப்பு ஊடாக கூட்டாட்சியை நடைமுறைப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை உயிர்ப்பிக்கவே சம்பந்தன் முற்படுகின்றார் - என்றார். (5,31)

## ஆப்கானிஸ்தானில் தாக்குதல்; 71 பொலிஸார் பரிதாபச் சாவு

காபுல், ஒக். 19
ஆப்கானிஸ்தானில் பொலிஸ் நிலையங்களைக் குறிவைத்து தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 71 பொலிஸார் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த நிலையில் தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பாக்தியா மாகாண தலைநகரான கார்டிசில் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்களில் தலிபான் அமைப்பு நேற்று நடத்திய தாக்குதல்களில் 71 பொலிஸார் உயிரிழந்தனர். சுமார் 200 பொலிஸார் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# ரக்கா மீட்பு



டமஸ்கஸ், ஒக். 19
ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் இருந்த சிரியாவின் ரக்கா நகரம் முழுமையாக மீட்கப்பட்டுள்ளதாக பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

ஈராக், சிரிய நாடுகளின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீண்டது ஈராக். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் பெரியளவில் உள்ள ஒரே நாடு தற்போது சிரியாவே. சிரியாவின் ரக்கா நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே தொடர்ந்தும் இருந்துவருகிறது. ஈராக்கின் மோசூல் கைப்பற்றப்பட்ட பின்னர் ரக்கா நகரமே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைநகராக இருந்தது. இந்த நிலையில் ரக்கா நகரம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

ரக்கா நகரின் மீட்பு அடுத்த சில மாதங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அழிவுக்கு வழிகோலும் என்று சிரிய அரசு அறிவித்துள்ளது. (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 8 நகரங்களில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43ஆக உயர்ந்துள்ளது. சுமார் 110 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகங்கள், வீடுகள், விடுதிகள் என்று ஒட்டுமொத்தமாகச் சுமார் 2ஆயிரம் கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளன. அவ்வாறு எரிந்து சாம்பராகியுள்ள ஒரு வீட்டின் ஒளிப்படமே இது. (ம)

## வியட்நாம் வெள்ளப்பெருக்கு; உயிரிழப்பு 60ஆக உயர்ந்தது

வியட்நாமில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60ஆக அதிகரித்தது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமின் நோயன், ஜென்பாய் உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாட்களாகக் கடுமையாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்த மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி 15பேர் உயிரிழந்தனர் என்று நேற்றுமுன்தினம் முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுக் காலை வெளியான தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 60ஆக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# முன்னாள் புலி உறுப்பினர்கள் அரசியல் கைதிகளேதான்!

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ்சிறைகளில்தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள்அரசியல் கைதிகள்அல்லர்என்கிற அரசதரப்பினின்கருத்துக்குதெளிவானதும்இறுக்கமானதுமானபதிலை வழங்கியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை, அதுவும் மிக முக்கியமான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையே தாம் தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்கிறோம் என்று அரச தரப்பினர் கூறிவரும் நிலையில், சம்பந்தரின் கருத்து ஆணித்தரமானது.

புலிகளினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை போரின் இறுதி நாள்களில் கொன்று எரித்தார்கள் என்று மூன்று பேர்மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தினர் மற்றும் முன்னாள் புலிகள் மூவர் எனச் சாட்சிகளை உள்ளடக்கி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கு, பூர்வாங்கவிசாரணைகள்முடிந்து விளக்கத்துக்குநியமிக்கப்பட்ட நிலையில் திடீரென சட்ட மா அதிபர் திணைக்களத்தால் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றனர், அவர்கள் வவுனியாவிற்கு வருவதற்குப் பயப்படுகின்றனர் என்கிற காரணங்களைத் தெரிவித்தே வழக்கு விசாரணை மாற்றப்படுவதாக நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் புலிகள் மூவரும் காலவரையறையற்ற உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அநுராதபுரம் நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொள்வதில் தமக்குள்ள மொழிப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டி வழக்கைமீண்டும்வவுனியாமேல்நீதிமன்றத்திற்கே மாற்ற வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. இந்த இலகுவான கோரிக்கையை சட்ட மா அதிபர் திணைக்களம் ஏற்க மறுப்பதால் இந்தப் பிரச்சினை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அரசியல் கைதிகளா இல்லையா என்கிற விவாதம் வரைக்கும் விரிவாகியிருக்கிறது.

விடுதலைப்புலிகள்இயக்கஉறுப்பினர்கள்பயங்கரவாதச்செயல்களில் ஈடுபட்டவர்கள், அவர்களை அரசியல் கைதிகள் என்று கூற முடியாது என்ற அரசதரப்பில் பலரும் கூறுகின்றனர். பன்னாட்டு அரங்குகளில் இந்தக் கைதிகள் குறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டபோது தலைமை அமைச்சர்கூட இதுபோன்றே பதிலளித்துள்ளார். இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை, குற்றங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். இப்போதும் அதுபோன்ற கருத்துக்களையே அரசில் உள்ள மற்றையவர்களும் தெரிவித்து வருகின்றார்கள்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்பதனால் அவர்களை விடுவிக்க முடியாது என்பது அரச தரப்பினரின் வாதம். அதற்குத்தான் முறையானபதிலைசம்பந்தன்வழங்கியிருக்கிறார். தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்தமது தனிப்பட்ட நலன்களுக்காக அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. அவர்கள் தமக்கு இடப்பட்ட கட்டளைகளையே நிறைவேற்றினார்கள். அப்படி அவர்கள் நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டதற்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் இணைந்திருந்த அமைப்பு அரசியல் காரணங்களை முன்வைத்தே தனிநாடு கேட்டுப் போராடியது. எனவே இன்று தடுப்பில் உள்ள எவரும் தமது தனிப்பட்ட தேவைக்காகக் குற்றம் இழைத்தவர்கள் அல்லர். அவர்கள் ஓர் அரசியல் தேவைக்காக அத்தகைய செயல்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். எனவே அவர்கள் அரசியல் கைதிகள் இல்லை என்று கூற முடியாது. இவ்வாறு தெளிவாகத் தெரிவித்திருக்கிறார் சம்பந்தர்.

இதுபோன்று ஓர் அரசியல் காரணத்திற்காகக் குற்றமிழைத்த ஜே.வி.பியினரைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க முடிந்த கொழும்பு அரசுக்குத் தமிழர்களை விடுவிப்பதற்குத்தான் முடியவில்லை என்று குத்திக்காட்டியதன் மூலம் இன்னும் தமிழர்கள் இரண்டாம்பட்சமானவர்களாக, அரசாளும் வர்க்கத்தினரின் திமிர் ஆளுமைக்கு அடங்கிப் போகவேண்டியவர்கள் என்று நினைக்கப்படுபவர்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் சம்பந்தர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தவிவகாரத்தைஇனியும்நீட்டி முழக்கிஇழுத்தடித்துக்கொண்டிருக்காமல் இது தொடர்பில் ஒரு அரசியல் முடிவு எடுக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதையும் அவர் துல்லியமாகக்கூறியிருக்கிறார். நீதித்துறை அமைச்சர்நாடு திரும்பியதும், இது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவு நல்ல முடிவாக இருக்கவேண்டும். அத்தோடு உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூவரின் பிரச்சினைக்கு மட்டும் தீர்வு காணும் முடிவாக இருக்காமல், அரசியல் கைதிகள் அனைவருக்குமான பொது முடிவாகவும் அது இருக்கவேண்டும்.

# இனங்களுக்கு இடையில் நம்பிக்கை ஏற்படுமாயின் தமிழர்களும் அரசதலைவர் பதவியில்

இந்துமதி

“மாகாணங்களில் மட்டுமல்லாது, மத்தியிலும் தமிழர்களுக்கு அதிகாரத்தில் பங்கு வழங்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன” இவ்வாறு தெரிவித்திருக்கின்றார், மக்கள் கருத்தறியும் ஆணைக்குழுவின் தலைவரான லால் விஜயநாயக்க. இதைக் கேட்கும்போது ஒரு பக்கம் மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறது. ஆனால் இந்தநாட்டைப்பொறுத்தவரையில் இது சாத்தியமாகக் கூடியதொன்றா என்பது தான் மிகப்பெரியதொரு கேள்வியாக எழுந்துநிற்கின்றது. முதலில் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலமாக வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்கள் மாகாண சபைகள் ஊடாக அதிகாரங்களை அனுபவிக்க முடியும். புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான இடைக்கால அறிக்கையில் மாகாணங்கள் அதிகாரப் பகிர்வின் முதல்நிலை அலகுகளாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையும், மத்திய சுற்றியல் உறவுகள் தொடர்பான உபகுழுவின் அறிக்கையும் விதந்துரைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றை இறுதியான முடிவுகளெனக் கொள்ள முடியாது. இறுதி அறிக்கையில் மாற்றங்கள் ஏற்படவும் கூடும்.


லால் விஜயநாயக்க

### இந்தியா போன்று இலங்கையிலும் மொழிவழி மாகாணங்களை உருவாக்க முடியும்

இந்த நிலையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் போன்று இங்குள்ள மாகாணங்களுக்கும் வழங்கப்படுமாயின், இதையொரு முன்னேற்றகரமான நடவடிக்கையெனக் கருத முடியும். இலங்கை ஒரு மிகச்சிறிய நாடு. இலங்கையின் மக்கள் தொகையும் குறைவு. இந்த நிலையில், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற முக்கிய அதிகாரங்களை வழங்குவது தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்கி விடுமெனக் கூறுவோரும் இங்கு உள்ளனர்.

இந்தியமாநிலங்கள் இலங்கையை விடக் கூடுதலான நிலப்பரப்பையும், மக்கள் தொகையையும் கொண்டுள்ளன. தமிழ் நாடும் இதே நிலையில்தான் காணப்படுகின்றது. தமிழ் நாடு இலங்கையை விடப் பெரியது. மக்கள் தொகையும் இலங்கையைப் போன்று நான்கு மடங்காகும். இந்த நிலையில் இந்தியா போன்று மொழிவழியாக மாகாணங்களை இணைத்து அதிகாரங்களை வழங்குவதின் முலமாக மாகாணங்களின் எண்ணிக்கைக் குறைத்துவிட முடியும். இதனால் நிர்வாகச் செலவுகளும் குறை வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

### இனவாத உணர்வைத் தூண்டிவிடும் பௌத்த மதத் தலைவர்கள்

இந்த வகையில் முன்னர் போன்று வடக்கு, கிழக்கு மாகாண்ங்களை இணைத்துவிட முடியும். இதனால் தமிழர்களின் விருப்பம் பூர்த்தியாகிவிடும். தனிநாடுகோரி நீண்டகாலம் போராடிய தமிழர்கள், இன்று தமக்கு அதிகாரப் பகிர்வு கேட்டு நிற்கின்றனர். இதைச் சாதகமாகப் பரிசீலித்து நல்லதொரு தீர்மானம் மேற்கொள்வதே இன்றைய தேவையாகும். இந்த நாட்டின் அரச தலைவராகவோ அல்லது தலைமை அமைச்சராகவோ சிறுபான்மையினத்தவர் ஒருவர் பதவி வகிக்க முடியாதநிலை தொடர்கின்றது. எதிர்க்கட்சித்தலைவர்பதவியையும்கூட முன்பொரு தடவை அ. அமிர்தலிங்கம் வகித்தார். தற்போது சம்பந்தன் வகிக்கின்றார். சம்பந்தனை அந்தப் பதவியிலிருந்து நீக்கி விடுவதற்கான முயற்சிகளும் தொடந்து இடம்பெற்று வருகின்றன. மத்தியில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென்ற கருத்து சிங்கள இனவாதத் தரப்பினரது காதுகளில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியதைப் போன்ற வேதனையை உண்டாக்கும். ஏனென்றால்தமிழர்களுக்குஎதையுமேவழங்கி விடக்கூடாது என்பதில் இவர்கள் பிடிவாதமாக இருக்கின்றனர். இன்னுமொரு போர் இடம் பெற்று அழிவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை, தமிழர்கள் கேட்கின்ற எதனையும் வழங்கி விடக் கூடாது என்பதே இவர்களது இனவாதக் கொள்கையாகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த வேண்டிய பௌத்ததேரர்கள்தாமும்தமது பங்குக்கு இனவாதக் கருத்தக்களைப் பரப்பி வருகின்றனர்.

### இனபேதங்களை கைவிட்டுச் செயற்பட்டால் அதிகாரத்துக்கான போட்டி எழாது

பௌத்தமதத்துறவிகள், ஒற்றையாட்சியையும், பௌத்தத்தையும் வலியுறுத்தி விடாப்பிடியாக நிற்கின்றனர். இவர்களது இந்த நிலைப்பாடு இலங்கையொரு பௌத்த தேரவாத நாடு என்பதை நிரூபிப்பது போன்றுள்ளது. இன்னுமொரு பௌத்த தேரவாத நாடான மியன்மாரும் இன்று இலங்கையை ஒத்த வகையில்தான் காணப்படுகின்றது. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதங்களை விடுத்து அனைவரும் இலங்கையர்கள் என்ற ஒரேகூரையின் கீழ் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணையும்போது அதிகாரத்தில் பங்கு கேட்க வேண்டிய தேவையே எழாது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் இது சாத்தியாகுமென எதிர்பார்க்க முடியாது. இதனால் அதிகாரப்பகிர்வும் அவசியமாகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில் அதிகாரம் மிக்கதான தலைமை அமைச்சர் பதவியை அநேகமாகப் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களே வகிக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் இதற்கு விதிவிலக்கு ஏற்படுவதுண்டு. இதைப்போன்று அதிகாரம் குறைவான குடியரசுத் தலைவர் பதவி சிறுபான்மை இன்த்தவர்களையே பெரும்பாலும் சென்றடைகின்றது.

இலங்கையிலும் துணை அரச தலைவர் பதவியைப்போல அல்லது துணைத் தலைமை அமைச்சர் பதவியைப்போல் உருவாக்கி அவற்றை சிறுபான்மை யினத்தவருக்கென ஒதுக்கி வைத்தல் வேண்டும். இவர்களுக்கிடையில் முழு அளவில் நம்பிக்கையும், ஐக்கியமும் ஏற்படுமாயின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் பதவிகளில் கூட சிறுபான்மை இனத்தவர்கள் அமர முடியும். இவர்கள் தமிழர்களாகவும் இருக்க முடியும்.




சேரலாதன்

கூட்டாட்சி அரசு தமிழ் மக்களது ஆதரவை இழந்து விடக்கூடியதொரு சூழ்நிலை உருவாகி வருகின்றது. அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசு காட்டி வருகின்ற அலட்சியப்போக்கினால் தமிழர்கள் எந்த அளவுக்கு ஆத்திரம் கொண்டுள்ளனர் என்பதை கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கில் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 14ஆம் திகதி அரசதலைவர்பங்கேற்றநிகழ்ச்சியை எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்தமை மக்களின் உணர்வுகளை அவர்களும் வெளிக்காட்டியதை எடுத்துக்காட்டிவிட்டது. அரச தலைவர் அரசியல் கைதிகளின் விடயத்தில் நல்ல தொரு முடிவை எடுத்திருந்தால் அரசியல் தலைவர்கள்மட்டுமல்லாதுபொதுமக்களும் திரண்டு அவருக்கு சிறந்த வரவேற்பை வழங்கியிருந்திருப்பார்கள். துரதிருஷ்டவசமாக அது நடக்கவில்லை. அரசதலைவர்மீதுதமிழர்களுக்குத் தனிப்பட்ட வெறுப்பு எதுவும் கிடையாது. அவரது எளிமையும், உதவுகின்ற மனப்பான்மையும் வெகுவாகப்பாராட்டப்பட்டுவருகின்றது.

ஆனால் அவர் தலைமை தாங்குகின்ற அரசின் செயற்பாடுகள்தான் தமிழர்களினால் வெறுக்கப்பட்டு வருகின்றன.

### ஆட்சிமாற்றம்ஏற்பட்ட போதிலும் தமிழர்களது பிரச்சினைகள் தொடர்கதையே

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம் பெற்ற அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாட்டின் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாகும். அந்த வேளையில் அரச தலைவர் பதவியில் அமர்ந்திருந்த மகிந்த ராஜபக்ச புலிகளுடனான போரை வெற்றி கொண்டவர் என்ற புகழுடன் பெருபான்மையின மக்களின் அமோகஆதரவையும் கொண்டிருந்தார். அரசியலில் அசைக்க முடியாததொரு சக்தியாகவும் அவர் விளங்கியிருந்தார். எவராலும் வெல்ல முடியாதவர் என்ற பெயரும் அவருக்கு இருந்தது.

ஒரு வெற்றி வீரனாகவே வலம் வந்து கொண்டிருந்த அவரை அவருக்குகீழ் பணியாற்றிய மைத்திரிபால என்ற சாதாரண மனிதர் வெற்றி கொள்வாரென எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் தமிழர்களின் வாக்குப்பலம் அதைச் சாதித்துக்காட்டிவிட்டது. மைத்திரிபால சிறிசேன அரச தலைவரானார். அவர்மீதான நம்பிக்கை தமிழர்களிடம் அநேகமாகக் காணப்பட்டது. அதற்கு ஏற்றாற் போன்று ஆரம்பத்தில் அவரது செயல்கள் காணப்பட்டன.

தமிழர்கள் முன்னர் போலன்றித் தற்போது அச்சமின்றி வாழ்கின்றனர் என்பது உண்மைதான். போரின் கொடுமையும், படை பினரின் கெடுபிடிகளும்இல்லைதான். ஆனால்அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, இடம்பெயர்ந்து சென்ற மக்களின் மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, படையினரது போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள், அரசியல்கைதிகளின் விவகாரம், தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து இடம் பெறுகின்றசிங்களக்குடியேற்றங்கள், தமிழர் பகுதியில் திடீர் திடீரென முளைக்கின்ற புத்த விகாரைகள், தென் பகுதி மீனவர்களின் அத்து மீறிய தொழில்நடவடிக்கைகள், புதிய அரசமைப்பின் உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை என ஏராளமான விடயங்கள் இழுபறியான நிலையில், தீர்வு காணப்படாத நிலையில் உள்ளன.

### நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்திய முன்னாள் அரச தலைவர்கள்

அரச தலைவர் மீதும், கூட்டாட்சி அரசின்மீதும்தமிழர்கள் அதிருப்திகொள்வதற்கு இவையே காரணமாக அமைந்து விட்டன. அரச தலைவர் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையில் உள்ளார். முன்னாள் அரச தலைவர்கள் தமது நிறைவேற்று அதிகாரங்களையும் பயன்படுத்தித் தாம் நினைத்தவாறு ஆட்சியைநடத்தினர். ஜே. ஆர். ஜயவர்த்தன, மகிந்த ராஜபக்ச ஆகியோர் மட்டுமன்றி ஆர். பிரேமதாஸவும், சந்திரிக்காவும் கூட தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குத் தவறவில்லை. இதனால் சில விடயங்களில் தமது இஷ்டம் போன்று துணிந்து செயற்பட்டனர். 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது எதிர்ப்புக்கிளம்பவே செய்தது.

ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தன அதைச் சமாளித்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு வழி வகுத்தார். மகிந்தராஜபக்சஎவரது ஆலோசனைகளையும் செவிமடுக்காது தாமே முடிவுகளை மேற்கொண்டார். ஆனால் தற்போதைய அரச தலைவரால் அவ்வாறு நடந்துகொள்ள முடியவில்லை. அரசில் பங்காளிகளாக இருப்பவர்களின் நெருக்குதல்கள் ஒரு புறமிருக்க, மகிந்த தரப்பினரின் எதிர் நடவடிக்கைகளும் அவரது கைகளைக் கட்டிப் போட்டுள்ளன. இதனால் இன்று எந்தவொரு விடயமாக இருந்தாலும், ஒன்றுக்குப் பல தடவைகள் யோசிக்க வேண்டிய நிலையில் அரச தலைவர் உள்ளார். தமிழர்களின் பிரச்சினைகள் இழுபறி நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு இதுவே முதன்மைக் காரணமாகும்.


### தமது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களது இன்றைய எதிர்பார்ப்பு

அரச தலைவரின் யாழ்ப்பாணத்துக்கான பயணம், முக்கிய தமிழ்த் தலைவர்களின் வரவேற்பைப் பெற்றிருக்காமை அவரது அரசியல் எதிரிகளுக்கு வாய்ப்பாக அமைந்து விடும். அண்மையில் பசில் ராஜபக்ச அரசியல் நோக்கங்கள் கருதியே யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அங்கு வைத்து போர்க்குற்றங்கள் என எதுவுமே இல்லையென கூறியதன் மூலமாக அவரது மனநிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. போர் தந்த வடுக்கள் மறையும் வரையில் மகிந்த தரப்பினர் தமிழர்களின் மனங்களை வெல்லவே முடியாது.

ஆனால் மைத்திரி தரப்பினர் மீதான வெறுப்பு இதில் மாற்றத்தை ஏற்படுத்தி விடலாம். தமிழர்கள் எவ்வளவோ விடயங்களில் விட்டுக்கொடுத்து நடப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். தனி நாட்டுக்கோரிக்கையை அவர்கள் கைவிட்டு விட்டார்கள். அதிகாரப் பகிர்வையே தற்போது நாடி நிற்கின்றனர். இத்துடன் தமது பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான் அவர்களது முதன்மைக் கோரிக்கையாகும். ஆனால் தற்போதைய அரசினால் அதனை நிறைவேற்ற முடியவில்லை.

நிலைமை இவ்வாறு நீடிக்குமாயின் அரசும், அரச தலைவரும் தமிழர்களின் ஆதரவை இழக்க வேண்டிநேரிடும். வடக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட முழு அடைப்பை ஓர் எச்சரிக்கை மணியாகக் கொள்ள முடியும். அத்துடன் அரச தலைவர் கலந்து கொண்ட நிகழ்ச்சியைப் புறக்கணித்தமையும் நல்லதொரு சகுனமாகத் தோன்றவில்லை. அரச தலைவர் சில விடயங்களில் துணிந்து செயலாற்ற வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது.





## ஆசிரியருக்கான கடிதம்

### மாதத்தில் ஒரு தடவையாவது தோல் கிளினிக் நடத்தப்படுமா?

வரணிப் பிரதேச மக்களின் உயிர் நாடியாகத் திகழ்வது வரணிப்பிரதேசமருத்துவமனை. இந்தமருத்துவமனை அடிப்படை வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலையில் இருந்தாலும், இங்கு ஏராளமான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். பொது மக்களின் கோரிக்கைக்கு அமைய சுகாதார அமைச்சு நோயாளர் காவு வண்டியொன்றை (அம்புலன்ஸ்) வழங்கியதால் தேவைப்படும் வேளைகளில் அவசர நோயாளர்களை மந்திகை மற்றும் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்க மிகவும் உதவியாக உள்ளது.

வீட்டில் உள்ள அவசர நோயாளர்களும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு நோயாளர் காவு வண்டிச்சேவையைப்பெறமுடிவது மிகவும் வரவேற்கக்கூடியது.

இந்தமருத்துவமனையில்சிறுநீரக நோயாளர் கிளினிக்கும் நடைபெறுகிறது. பற்சிகிச்சையும்ஒவ்வொரு கிழமைகளிலும் நடைபெறுவது நோயாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இதே போல மாதமொரு முறையேனும் தோல் வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கிளினிக் நடைபெற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால்பிரதேசமக்கள்பெரும்நன்மை அடைவார்கள். தற்போதைய சூழலில் மந்திகை மருத்துவமனையில் மாதத்தில்முதலாவதுபுதன்கிழமையில் தோல் கிளினிக் நடைபெறுகிறது. இப்படிப்பட்ட சூழலில் அங்கு நோயாளர் தொகை அதிகரிக்கும். இது சகலருக்கும் (நோயாளர்களுக்கும், மருத்து வர்களுக்கும்)மிகவும் சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே வரணிப்பிரதேசத்தில்பெருமளவு மக்கள் வாழும் பகுதியில் இயங்கும்பிரதேச மருத்துவமனையில் மாதம் ஒரு தடவையேனும் தோல்கிளினிக்நடைபெற்றால், அது அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் இந்த விடயத்தில் உரிய கவனம் எடுத்து இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா?

ந. துஷாந்
வரணி.


விசேட
விலைக்கழிவு
லங்கா ரைல்ஸ் மற்றும்
இறக்குமதி செய்யப்பட்ட
முதல் தர 2'x 2' அளவிலான
ரைல்ஸ் வகைகளுக்கு...
NHT
LANKATILES
நிலப்பதிப்பு, சுவர்ப்பதிப்பு ரைல்களின்
ஏக விநியோகஸ்தர்கள்
தரமான Commode வகைகள்,
குளியலறை சாதனங்களையும்
விசேட விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
நாராயணா கட்டடப் பொருட்கள் வர்த்தகர்
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5390, 021 567 5390


விசேட விலைக்கழிவு
யாழ் நகரில் நவீன
Digital 3D Wall & Floor Tiles
மற்றும்
குளியலறை சாதனங்களுடன்
HOUSE OF CERAMIC
பிரமிக்கவைக்கும் பிரம்மாண்ட காட்சியறையில்
வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ற தெரிவுகள்
3D
Digital
Tiles
LANKATILES
Tiles விசேட விலைக்கழிவில்
115, Stanley Road, Jaffna.
Tel: 021 221 9599
NO 581, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 9599

# 'மிகச்சிறந்த வணிக பேண்தகைமை சாதனை' விருதை டி.எவ்.சி.சி வங்கி பெற்றுக்கொண்டது

'மிகச்சிறந்த வணிக பேண்தகைமை சாதனை' விருதினை கார்ள்சுருகி பேண்தகைமை நிதி விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது டி.எவ்.சி.சி வங்கி பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கையில் டி.எவ்.சி.சி வங்கியானது தமது கூட்டாண்மை வினைத்திறனில் பேண்தகைமையினை ஒருங்கிணைத்தல் மற்றும் தமது வர்த்தச்செயன்முறை ஆகியவற்றை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமை காரணமாகவே இந்த விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

டி.எவ்.சி.சி வங்கியின் பேண்தகைமைப் பிரிவு முகாமையாளர் சேனக்க ஜயசிங்க இந்த விருதினை கார்ள்சுருகி நகரின் நகரபிதா பிறாங் மென்ரறப்பிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள டி.எவ்.சி.சி வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜூன் பெர்ணாண்டோ,

"பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு என்பது எமது பெறுமானங்களில் வலுவாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், நாம் எவ்வாறு எமது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கிறோம், பொருள்கள் சேவைகளை எவ்வாறு மேம்படுத்துகிறோம் என்பதையும் சிறந்த முறையில் பிரதி பலிக்கின்றது. இந்த விருதானது நாம் செயற்படும் சமூகங்கள் மத்தியில் பேண்தகைமைப் பெறுமானங்களை உருவாக்கு வதில் டி.எவ்.சி.சி வங்கி கொண்டுள்ள ஆழ்ந்த அர்ப்பணிப்பு உணர்வினையும், இலங்கையில் பேண்தகைமைமிகுந்த நிதி நடைமுறைகளை உருவாக்கி பேணுதல் குறித்தும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது." - என்றார்.

கார்ள்சுருகி பேண்தகைமை நிதி விருதுகள் பேண்தகைமை நிதியியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்கியுள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு அளிக்கப்படுகின்றது. பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் பேண்தகைமையினை தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்து, பேண்தகைமை நிதியியலில் மிகச்சிறந்த பங்களிப்பினை நல்கிய நிதி நிறுவனங்களே விருதுக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. கார்ள்சுருகி விருதானது பேண்தகைமை நிதிக் கருவிகள் மற்றும் சந்தைகளை உலகளாவிய ரீதியில் குறிப்பாக பசுமை நிதி மற்றும் முதலீடுகள், நிதி உள்ளடக்கம் மற்றும் சமூக நிதி, பசுமை உரிமை முதல் மற்றும் முயற்சியாண்மை முதலீடுகள், நிதிச்சேவை நிறுவனங்களின் பேண்தகைமையினை பூரணமாக ஒருங்கிணைத்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படுகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

# தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கி ஆளுநராக இந்திரஜித் குமாரசுவாமி



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கி ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

'குளோபல் கப்பிட்டல் மார்க்கெட்ஸ்' விருது வழங்கல் (Global Capital Markets Awards) விழாவின் போதே இந்த விருது வழங்கி அவர் மதிப்புறுத்தப்பட்டுள்ளார்.

உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டுக்கு இணையாக வொஷிங்டன் நகரில் இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு முதலீடு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைஎன்பன இலங்கையில் சிறந்த அடைவு மட்டத்தில் காணப்ப ட்டுள்ள தன்மைகளும் இந்த மதிப்புறுத்தலுக்கான அடிப்படைகளாக கொள்ளப்பட்டமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2018 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 20.10.2017 – 06.11.2017 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 07.11.2017 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 07.11.2017 பி.ப 2.00 மணிக்கு

| தொ இ | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள் வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட வாகன தரிப்பிடம் நீங்கலாக) | 3,000.00 | 30,000.00 | 11,000,000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 181,000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 3,082,000.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 59,000.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 46,000.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 60,500.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 10,000.00 | 177,100.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 750.00 | 10,000.00 | 177,100.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 88,000.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 42,600.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் நீங்கலாக) | 3,000.00 | 30,000.00 | 21,451,000.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 50,000.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 82,500.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 67,300.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 62,200.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 33,000.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 248,600.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 230,000.00 | |

குறிப்பு:-01). மருதனார்மடம் சந்தைத் தொகுதி, இணுவில் சந்தை தொகுதி என்பன அமைந்துள்ள பகுதியில் 2018ஆம் ஆண்டில் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
02). மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடத்திற்கான மின் கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்.
03). எவரொருவரும் பொதுச்சந்தைக்கு உள்ளே எக்காலத்திலும் எங்கேனும் விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தலோ, பகுதியாக்கலோ ஆகாது.

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2017.11.22ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2017.11.22 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்
9. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
11. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு
13. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.சுதர்சன்**
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

# கிராமிய மக்களின் அபிவிருத்தி மேம்படுத்தப்படும்

## அரசதலைவர் கருத்து

கிராமிய மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் விதமாக ஆரம்பிக்கப்பட்ட 'உதவிக்கரம்' வேலைத்திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் செயற்படுத்தப்படும் என்ற தகவலை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குடிமக்களுக்கான 'உதவிக்கரம்' நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துக்கூறிய அவர், "நாட்டை மேம்படுத்துவதற்கான சவால்களின் மத்தியில் அந்தச் சவால்களுக்கு முறையான வகையில் முகம்கொடுப்பதற்கு உகந்த தரப்பினர் அவசியமாகவுள்ளனர். அந்தவகையிலே நாட்டின் குடிமக்களுக்கான உதவிக்கரம் இன்றைய சமூகம் மற்றும் நாளை பிறக்கவிருக்கும் எதிர்கால சந்ததிக்குரிய தூய்மையான எண்ணங்களுக்குரித்தான நடைமுறை வேலைத்திட்டமாக அமைந்துள்ளது.

குறிப்பாக 'புரவெசி அத்வெல்' (குடிமக்களுக்கான உதவிக்கரம்) மற்றும் 'கிராம சக்தி'ஆகிய தேசிய வேலைத்திட்டங்கள் ஊடே நாட்டை வெற்றிப்பாதைக்குக் கொண்டு செல்லும் விரிவான பணிகளை முன்னெடுத்து வருகிறோம்." - என்றார். (ஒ)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வரலாற்றில் இன்றைய தினம் 19.10.2017

1512 - இறையியலில் கலாநிதிப் பட்டம் பெற்றார் மாட்டின் லூதர்.

1912 - ஒட்டோமான் பேரரசிடம் இருந்த லிபியா வின் திரிபோலிநகர் இத்தாலியால் கைப்பற்றப் பட்டது.

1921 - போர்த்துக்கேய தலைமை அமைச்சர் அன்ரோனியோ கிறன்கோவும், வேறுசில அரசியல் பிரமுகர்களும் லிஸ்பன் நகரில் கொல்லப்பட்டனர்.

1933 - லீக் ஒப் நேஷனில் இருந்து ஜேர்மனி விலகியது.

1944 - பிலிப்பைன்ஸில் அமெரிக்கப் படைகள் தரையிறங்கின.

1950 - கொரியப் போரில் ஐக்கிய நாடுகள் படைக்கு எதிராகப் போராட ஆயிரக் கணக்கான சிப்பாய்களை அனுப்பியது சீனா.

1960 - கியூபாவுக்கு எதிராக முழுமையான பொருளாதாரத் தடையை அமெரிக்க அரசு அறிவித்தது.



2003 - இரண்டாம் ஜோன் பாப்பரசரால், அன்னை திரேசா முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

2005 - மானுட விரோத குற்றங்களுக்காக பக்தாத்தில் வைத்து விசாரிக்கப்பட்டார் சதாம் ஹுசைன்.

2007 - தமிழரின் சுயாட்சிக் கோரிக்கைக்கு அரசின் இராணுவத் தீர்வு பதிலாகாது என்று பயங்கரவாத தடுப்பு மாநாட்டில் ஐரோப்பிய நிபுணர் கருத்து.

2007 - பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோவின் பேரணியொன்றில் குண்டுவெடித்ததில் 150 பேர் உயிரிழந்தனர். சுமார் 400 வரையிலானோர் காயமடைந்தனர்.




தீபாவளி என்பது எமது வாழ்வில் மிக முக்கியமான பண்டிகை. இந்த தீபாவளியில் அனைவரினதும் வாழ்வில் இருள் நீங்கி மகிழ்ச்சி கிடைக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம். தீபாவளி என்பது லக்ஷ்மிக்கு உகந்த தினமாகும். தனத்திற்கு தேவதை லக் ஷ்மி. எனவே பன்னிரு ராசிக்காரர்களுக்கும் இந்த தீபாவளி முதல் அடுத்த தீபாவளி வரை பொருளாதார நிலை எப்படி இருக்கும்?

### மேஷம்:

உங்களுடைய தனாதிபதி சுக்கிரன். உங்களிடம் வேகம் இருக்க வேண்டிய அளவிற்கு விவேகமும் இருக்க வேண்டியது அவசியம். இந்தாண்டு தீபாவளி மிக இனிமையானதாக இருந்தாலும் பணம் சார்ந்த விஷயங்களில் சில நெருக்கடி ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் சிறு கருத்து வேறுபாடுகள் வரலாம். குழந்தைகள் மூலம் செலவினங்கள் அதிகரிக்கும். தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

### ரிஷபம்:

தனகாரகன் சுக்கிரன்னை ராசிநாதனாகவும் வித்யாகாரகன் புதனையும் அடிப்படையாகக் கொண்ட உங்களிடம் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் கவர்ச்சி நிறைந்திருக்கும். இந்தாண்டு தீபாவளி மிக சுகமானதாக இருந்தாலும் குடும்பத்தில் சில வாக்குவாதங்களுக்குப் பிறகு மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணை உறவினர்களுடன் கருத்துகளை பரிமாறும் போது கவனம் தேவை. குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்பது மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

### மிதுனம்:

தனாதிபதியாக சந்திரனையும் விரையாதிபதியாக சுக்கிரனையும் அடிப்படையாக கொண்ட உங்களிடம் சிக்கனம் இருந்தாலும் செலவு ஒரேயடியாக செய்வீர்கள். இந்தாண்டு தீபாவளி மிக மகிழ்ச்சியானதாக இருந்தாலும் குடும்பத்தில் சில மருத்துவச் செலவுகள் இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் பிணக்குகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. குழந்தைகள் உங்கள் மனம்போல் நடந்துகொள்வார்கள். தொழில் உத்தியோகத்தில் நல்ல மாற்றம் ஏற்படும் சூழல் உருவாகிறது. சொந்தத் தொழில் செய்வீர்கள். வெளிநாட்டு பயணம் ஆகியவை கிட்டும்.



### கடகம்

அதிவேக சஞ்சார குணமுடைய சந்திரனை ராசிநாதனாகவும், ராஜ கிரகம் என்று அழைக்கப்படும் சூரியனை தனாதிபதியாகவும் கொண்ட நீங்கள் சொல்லும் சொல்லை பணமாக்கும் வித்தை தெரிந்தவர்கள். இந்தாண்டு தீபாவளி மிக மனமுவந்து இருந்தாலும் குடும்பத்தில் சில வாக்குவாதங்களுக்கும் குறைவிருக்காது. வாழ்க்கைத்துணையுடன் சில கருத்து வேறுபாடுகள் குழந்தைகளால் ஏற்படலாம். தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் வரும். முதலீடுகளைச் செய்வீர்கள்.

## நாளை

## 20.10.2017

வெள்ளிக்கிழமை

## ஐப்பசி 03

திதி: பிரதமை பி.இ. 12.18 வரை
நட்சத்திரம்:சித்திரை மு.ப. 09.18 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை

# பத்தி எழுத்து

## பாதுகாப்புக்கு எதற்கு அதிக நிதி ஒதுக்கீடு?

அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டங்கள்முன்வைக்கப்பட்டுள்ளன. வழமை போன்று நாட்டின் பாதுகாப்புக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2 லட்சத்து 90ஆயிரத்து 711 மில்லியன் ரூபா நிதி பாதுகாப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை இந்த ஆண்டை விட 6 ஆயிரத்து 667 மில்லியன் ரூபாவால் அதிகமாகும். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பின்னடைவுகளுக்கு மத்தியில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மிகையான அதிகரிப்பு அல்லது பெரியளவில் தேவையற்ற ஒன்று என்றே எண்ணத்தோன்றுகிறது. இதன்படியே கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

''முன்னாள் அரச தலைவர் மகிந்த இலங்கையை கடும் கடன் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டார். அவர் வாங்கிய கடன்களை தற்போதைய கூட்டு அரசு அடைத்து வருகிறது'' என்று கடந்த இரண்டு வருடங்களில் பலராலும் பல தடவைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதீத கடன் சுமையால் நாட்டின் ஒவ்வொரு வளமும் ஆசிய ஜாம்பவான்களான சீனாவுக்கும், இந்தியாவுக்கும் குத்தகைக்கு விடப்படுகின்றன.

நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய பின்னணியில் பார்க்கின்ற போது அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இலங்கையை மேலும் கடன் நெருக்கடிக்குள் தள்ளிவிடப் போகின்றது என்று உறுதியாகச் சொல்லிவிட முடியும்.

"அமெரிக்காவிடம் இருந்து அதி நவீன ஆயுதங்களை இலங்கை அதிகளவில் கொள்வனவு செய்கிறது'' என்று முன்னாள் அமைச்சரும் சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கனதித் தன்மையை கேள்விக்கு உட்படுத்தி அது தொடர்பில் ஆற்றிய உரையிலேயே இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் நாட்டில் ஆயுதக் குழுக்கள் இல்லை என்று கூறிவருகிறது இலங்கை. அன்னிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு நெருக்கடிகள் எதுவும் இல்லை. இவ்வாறிருக்க எதற்காக நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்து காசைக் கரியாக்குகிறது கூட்டு அரசு. அதிலும் பாதுகாப்புக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட 6 ஆயிரத்து 667 மில்லியன் ரூபாவால் அடுத்த ஆண்டுக்கான நிதியை அதிகரித்திருப்பதென்பது வரவு செலவுத் திட்டம் வலுவற்ற தன்மையில் உள்ளது என்பதற்கு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு.

சுற்றிவரக் கடல், சிறந்த விவசாய நிலங்கள் என்று தன்னிறைவுப் பொருளாதாரத்தை இலகுவாகச் சாத்தியப்படுத்தக்கூடிய வகையில் இயற்கையாகவே அமைவு பெற்றுள்ள இலங்கை, அதற்குக் காத்திரமான நகர்வுகளை வெளிப்படுத்துவது எப்போது.

# பெண்ணியம்

## எதிர்கால உலகத்தை ஆளும் சக்தி



இந்துமதி

உலகின் முதலாவது பெண் தலைமை அமைச்சரைக் கொண்டிருந்த எமது நாட்டில் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. மிதிக்கப்படுவதையே காண முடிகின்றது. நான்கு மணிநேரத்துக்கு ஒரு தடவை பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படும் பெருமை எமது நாட்டில் தான் உள்ளது. இறைவனின் படைப்பில் உருவாக்கப்பட்ட ஆணும், பெண்ணும் இந்த உலகின் இயக்கத்தில் சம அளவான முக்கியத்துவத்தையும் பங்கினையும் கொண்டுள்ளனர். ஆணின்றிப் பெண்ணும் பெண்ணின்றி ஆணும் இவ்வுலகில் வாழ முடியாது. கடினமான வேலைகளைச் செய்து முடிக்கக் கூடிய உடலமைப்பும் உள திடமும் ஆண்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. ஆனால் பெண்களின் உடலமைப்பும் உளவியல் பாங்கும் அவ்வாறு காணப்படுவதில்லை. இதன் காரணமாகவே பெண்களை மெல்லியலாள் என்றும் அழைப்பார்கள்.

### ஆண், பெண் வரையறைகளும் தனித்துவமும்

பெண்கள் உடல் அமைவு ரீதியில் பலவீனமான நிலையில் இருப்பதன் காரணமாகவே ஆண்களால் அவர்களை இலகுவாக ஆளுமை செய்துகொள்ள முடிகிறது. ஆண்களின் வக்கிரபுத்தி காரணமாகப் பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணையத் தளங்களில் வெளிப்படும் கலாசாரக் கேடான நிகழ்வுகள் என்பன ஆண் சமுதாய வரையறைகளை சீரழித்துவிடுவதில் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளன. பெண்கள் மீதான வன்முறைகளையும் இவை இயல்பாகவே தூண்டிவிடுகின்றன. சமுதாயத்தைச் சீரழித்து விடுகின்ற இத்தகைய தீமையான விடயங்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதில் அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும்.

"நள்ளிரவுப் பொழுதில் பெண்கள் தனியாக வீதியில் உலாவக்கூடிய நிலை உருவாகும் போதுதான் இந்த நாடு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றதாகக் கருதமுடியும்" என்று சொன்னார் இந்தியாவுக்கு அந்நியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி. அதுவிதமே தமிழர் பிராந்தியங்களில் விடுதலைப் புலிகளின் ஆட்சி அதிகாரம் நிலவிய காலப்பகுதியில் காரண காரியமான எவ்வேளையிலும் மேற்சொன்ன பெண்களின் சுதந்திர மான ஊசாட்டம் என்பது நிதர்சனமாகியது. கழுத்து நிறைந்த தங்க நகைகளை அணிந்தவாறு பெண்கள் இரவுப் பொழுதில் சுதந்திரமாகவும், எந்தவிதமான அச்சமின்றியும் நடமாடக் கூடிய சூழ்நிலை அப்போது காணப்பட்டது.

பெண்களைக் களங்கப்படுத்துபவர்களுக்கு ஆகக் கூடிய தண்டனை அப்போது வழங்கப்பட்டது. இதனால் பெண்களைத் துன்புறுத்துவதற்கு எவருமே துணிவு கொண்டதில்லை. விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் ஆண் போராளிகளுக்கு சரி நிகர் சமானமாய் களமாடினார். புலிகளின் போர் வெற்றிகளுக்கு காரணமாகவும் இருந்திருக்கிறார்கள். தலைவர் பிரபாகரன் பெண்போராளிகளின் நலனில் அதிக அக்கறையுடையவராகக் காணப்பட்டார்.

### தாய்மையின் சிறப்பு

பெண் என்று சொல்லும்போதே எம்மைப் பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாய்தான் எம் கண்முன்னே தோற்றம் தருகிறாள். பெண் குலத்தின் திலகமாகவும் மகுடமாகவும் திகழ்பவள் எமது தாய்தான். தாய்க்கு நிகராக எவரையுமே குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியாது. மூத்த குழந்தை பெண்ணாக இருந்துவிட்டால் அந்தக் குடும்பத்தில் லக்சுமி கரம் தானாகவே தோன்றிவிடுமெனப் பெரியோர்கள் கூறுவர். மேலும் அந்தப் பெண் குழந்தை தாய்க்கு நல்ல துணையாக இருப்பதால் அவளது சுமைகளும் குறைந்துவிடும்.

### பெண் தொடர்பான சமூக நோக்கு

முன்னைய காலங்களில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகளவில் விதிக்கப்பட்டன. அவர்கள் வெளியில் நடமாடுவதும் குறைவாகவே காணப்பட்டது. கல்வியில் கூடப் பெண்களுக்குப் பாரபட்சம் காண்பிக்கப்பட்டது. இதனால் கல்வியறிவு குறைந்தவர்களாகவே பெண்கள் காணப்பட்டனர். இதன் காரணமாக முற்றுமுழுதாக ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை பெண்களிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. ஆணாதிக்கம் தலைதூக்குவதற்கு இதுவே மூல காரணமானது. ஆணாதிக்கம் எனும்போது பெண்களை அடிமைப்படுத்துவதையே குறிக்கின்றது. பெண்களை அடிமைப்படுத்துவதென்பது இன்று கூடத் தொடர்கின்றது. அதில் பல்வேறு பரிணாமங்களும் உள்ளன.

பெண் குழந்தையொன்று பிறக்கும்போதே அதன் பெற்றோர் அந்தக் குழந்தையின் எதிர்காலம் தொடர்பான கவலைகளில் ஆழ்ந்து விடுகின்றனர். அப்போதே அந்தக் குழந்தையின் திருமண ஏற்பாடுகள் தொடர்பான சிந்தனைகள் அவர்களது மனங்களில் எழ ஆரம்பித்துவிடும். அதில் சீதனம் முக்கிய இடத்தைப் பிடித்துவிடும். தமிழர்களின் வாழ்வியலில் இருந்து இந்தச் சீதனம் எனும் கொடுமை இன்னமும் அகவில்லை. இந்த நாட்டில் வாழ்கின்ற எமது சகோதர இனமக்களிடம் இந்தக் கொடுமை ஒரு போதுமே இருந்ததில்லை.

இதனால் அந்த இனத்தில் பெண் குழந்தைகள் பிறக்கும்போது எவருமே கவலைப்படுவதில்லை. மாறாக மகிழ்ச்சியையே வெளிப்படுத்துகின்றனர். எம்மைப் பொறுமையுடன் தாங்கி நிற்கின்ற இந்தப் பூமியும் ஒரு பெண்ணாகவே உருவகப்படுத்தப்படுகின்றது. பூமாதேவி என்ற பெயரும் அதற்கு உண்டு. எமக்குப் பாலைப் பொழிந்து தருகின்ற பசுவும் ஒரு பெண் படைப்புத்தான். கடலைக் கூடக் கடல் அன்னை என்றே நாம் அழைக்கின்றோம். போற்றிப் புகழ்கின்றோம்.

தமிழ் நாட்டில் நீலகிரியை மலைகளின் அரசி என அழைப்பார்கள். இவ்வாறு பெண்கள் இல்லாத இடமே இல்லை என்று கூறும் அளவுக்கு அவளது பெருமை வியாபித்துக் காணப்படுகின்றது. எமது மொழியைக் கூடத் தமிழ் அன்னை என்றுதான் நாம் அழைக்கின்றோம்

### பெண் தெய்வத்தின் சிறப்பு

கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றுக்கு அதிபதிகளாகப் பெண் தெய்வங்களே சித்திரிக்கப்படுகின்றன. இத்தகைய பெருமைகளையெல்லாம் தனக்கத்தே கொண்டிருக்கும் பெண்களை இழிவுபடுத்துவதும், துன்புறுத்துவதும்,பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்குவதும் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளத் தக்க செயல்களல்ல.

> “முன்னைய காலங்களில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகளவில் விதிக்கப்பட்டன. அவர்கள் வெளியில் நடமாடுவதும் குறைவாகவே காணப்பட்டது. கல்வியில் கூடப் பெண்களுக்குப் பாரபட்சம் காண்பிக்கப்பட்டது. இதனால் கல்வியறிவு குறைந்தவர்களாகவே பெண்கள் காணப்பட்டனர். இதன் காரணமாக முற்றுமுழுதாக ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை பெண்களிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. ஆணாதிக்கம் தலைதூக்குவதற்கு இதுவே மூல காரணமானது. ஆணாதிக்கம் எனும்போது பெண்களை அடிமைப் படுத்துவதையே குறிக்கின்றது. பெண்களை அடிமைப்படுத்துவதென்பது இன்று கூடத் தொடர்கின்றது. அதில் பல்வேறு பரிணாமங்களும் உள்ளன.

### இலக்கியச் சார்பற்ற தொடர்களில் பெண் கதாபாத்திரம்

தொலைக்காட்சித் தொடர்களில் பெண் கதாபாத்திரங்கள் சதிகாரர் களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். மற்றவர்களுக்கு தீங்கு புரிகின்றனர். நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்றும் காட்சிப்படுத்தப்படுகின்றனர். இவற்றைப் பார்க்கும் போது இந்த உலகில் நல்ல பெண்களே இல்லையா..? என்ற கேள்விதான் எழுகின்றது.


பெண்களை இழிவுபடுத்துகின்ற இந்தத் தொலைக்காட்சித் தொடர்களுக்கு உடனடியாகவே தடை விதிக்க வேண்டும். இதேபோன்றதிரைப்படங்களிலும் விளம்பரங்களிலும் பெண்கள் ஆபாசமாகத் தோன்றுவதற்கும் உடனடியாகத் தடை விதிக்க வேண்டும்.

இதைவிடப் பெண்களும் சில விடயங்களில் கவனமாக இருத்தல் வேண்டும். குறிப்பாக ஆடை அணிவதில் தமது பண்பாட்டுக்கு இயைபற்ற விதத்தைக் கடைப்பிடித்திருக்கக்கூடாது. பெண்கள் அரைகுறையான ஆடைகளை அணிவதும் ஆண்களின் வக்கிரபுத்தியைத் தூண்டுவதற்கும் ஒரு காரணமாகிவிட்டது.

### தேவைக்குரிய பாங்கு

போர் காரணமாக இலட்சக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்களின் வாரிசுகள் அந்த நாடுகளிலேயே பிறந்து அங்குள்ள கலாசாரத்தைப் பின்பற்றுகிறார்கள். ஆடைகளும் இதில் உள்ளடக்கம். ஆனால் பெண்கள் இலங்கைக்கு வரும் போதும் தாம் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளின் கலாசாரத்துக்கு அமைவான ஆடைகளை அணிந்து வருவது பொருத்தமானதாகக் தெரியவில்லை. எமது கலாசாரத்துக்கு வினோதமாகவும் இது காணப்படுகின்றது.

மதிப்பார்ந்த நிலையில் வைத்துப் பார்க்கப்படும் பெண்கள் தமது மதிப்பை இழக்கும் படியான காரியங்களைச் செய்யக்கூடாது. எத்தகைய இடர்கள் ஏற்படினும் தமது மானத்தை இழக்கக்கூடாது. எதிர்காலத்தில் பெண்களே இந்த உலகை ஆளப் போகின்றார்கள் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாககத் தெரிகின்றன. அந்த நிலை முழுமையாக உருவாகும் போது பெண்களுக்கெதிரான வன்முறைகளும் ஒய்ந்துவிடும்.



# சுரைக்காய் பொரியல்



**தேவையான பொருள்கள்**

சுரைக்காய் நறுக்கியது - 1 கோப்பை
வெங்காயம் - 1
தக்காளி - 1
பூண்டு - 2 பல்
மஞ்சள் தூள் - 1/4 கரண்டி
சீரகத்தூள், மிளகாய்தூள் - 1/2 கரண்டி
கடுகு - 1/4 கரண்டி
எண்ணெய் - 1 கரண்டி
கொத்தமல்லி -கரண்டி
உப்பு - தேவையான அளவு.

**செய்முறை**

சட்டியில் எண்ணெய் விட்டு கடுகைத் தாளித்து. பூண்டை நசுக்கிப் போடவும். பொடியாக நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து 23 நிமிடங்கள் வரை வதக்கவும். நறுக்கிய தக்காளியை சேர்த்து 2 நிமிடங்கள் வதக்கவும். பின்பு சுரைக்காயை சேர்க்கவும். சிறிது தண்ணீர் தெளித்து உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள், சீரகத் தூள் சேர்க்கவும். மூடி வைத்து சுரைக்காய் வேகும் வரை வதக்கவும். தண்ணீர் வற்றியவுடன் கொத்தமல்லி தூவி இறக்கவும்.



## இது புதுசு

பெண்களுக்கான புதிய சட்டை வகைகள் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 90 | 80 | 60 |
| கத்தரி | 130 | 100 | 100 | 100 | 160 |
| மரவள்ளி | 80 | 50 | 50 | 60 | 60 |
| பயிற்றை | 180 | 200 | 140 | 140 | 140 |
| பாகல் | 140 | 300 | 300 | 250 | 90 |
| க.கிழங்கு | 90 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 120 | 110 | 140 | 100 |
| சி.வெங்காயம் | 240 | 240 | 240 | 280 | 260 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 200 | 220 | 180 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 80 | 60 |
| கீரை | 40 | 40 | 35 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 500 | 370 | 400 | 400 |
| புடோல் | 80 | 120 | 100 | 120 | 100 |
| கோவா | 140 | 160 | 140 | 140 | 140 |
| வெண்டி | 80 | 120 | 100 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 140 | 180 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 200 | 240 | 200 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 90 | 80 |
| உ.கிழங்கு | 90 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 280 | 250 | 220 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 300 | 260 | 200 | 180 |
| கரட் | 120 | 260 | 70 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 300 | 220 | 120 | 140 |



# அன்னாசிப் பழச்சாறை குடிப்பதால் ஏற்படும் அளவில்லா நன்மைகள்

அன்னாசியிலிருந்து தயாரிக்கப்படும் சாறு மிகுந்த சுவையுடன் இருக்கும். இயற்கையாகவே இதில் சக்கரை அதிகம் உண்டு. இதனால் அனைவரும் இந்தப் பழச்சாற்றை சுவைப்பர். ஆனால் இதில் பல வகை ஊட்டசச்த்துகளும் உள்ளதை பலரும் அறிவதில்லை. அன்னாசி பழச்சாறில் உள்ள மகிமைகளை அறிந்து கொள்வோம்.
அன்னாசி பல வித நன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது, உடல் வளர்ச்சியை ஊக்குவிப்பது, வீக்கத்தைக் குறைப்பது, இதய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது, மன நிலையை சமன் செய்வது, தசை ஆற்றலுக்கு உதவுவது , கருவுறுதலை அதிகரிப்பது , சமிபாட்டை அதிகரிப்பது என்ற விதமாக அமைந்திருக்கும்.
உயர் குருதி அழுத்தம், குறைந்த வளர்சிதை மாற்றம், குறைந்த நோயெதிர்ப்பு சக்தி, கருவுறுதலில் பிரச்சினைகள், வீக்கங்கள், புற்று நோய் அபாயம், மலச்சிக்கல், மனச்சோர்வு, பதட்டம் போன்ற பாதிப்புகள் உள்ளவர்கள் அன்னாசிப் பழச்சாறை தொடர்ந்து அருந்தலாம்.

**குருதி அழுத்தத்தைக் குறைக்கிறது**

பொட்டாசியம் அதிகமாக இருப்பதால் உயர் குருதி அழுத்தத்திற்கு இது ஒரு சிறந்த தீர்வாக இருக்கிறது. இது ஒரு சிறந்த குழல்விரிப்பி. அதனால் ஹைப்பர் டென்ஷன் குறைகிறது. இதனால் இதய நலன் முற்றிலுமாக பாதுகாக்கப்படுகிறது. இதன் மூலம் மாரடைப்பு, வாதம் போன்றவற்றின் அபாயங்கள் குறைகிறது.

**நோயெதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகிறது**

இந்தப் பழச்சாறில் விற்றமின் அதிகமாக உள்ளது. கடைகளில் கிடைக்கும் அன்னாசிப் பழச்சாறில் அமிலம் சேர்க்கப்படுகிறது. இதன்மூலம் விற்றமின் 'சி' ஊட்டச்சத்து இன்னும் அதிகரிக்கிறது. இது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை ஊக்கப்படுத்தி வெள்ளை அணுக்களின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இதுவே உடலைக் காக்கும் அரணாக இருக்கின்றது.

**மன நிலை மாற்றங்களைச் சீராக்குகிறது**

விற்றமின் 'பி' அன்னாசி சாற்றில் அதிகமாக உள்ளது. மன நிலையை மேம்படுத்தும் ஓமோன் வளர்ச்சியை சீராக்குகிறது. இதனை அருந்துவதால் பதற்றம் தணியும். மனச்சோர்வுக்கு ஒரு சிறந்த தீர்வைத் தருகிறது.

**சமிபாட்டுக்கு உதவுகிறது:**

அன்னாசியில் உள்ள நார்ச்சத்து . மற்றும் ப்ரோமெலைன் போன்றவை சமிபாட்டுக்கு நன்மை செய்பவையாகும். சமிபாட்டைச் சீராக்கி மலச்சிக்கலை தீர்க்கிறது. குடல் இயக்கத்தை அதிகப்படுத்தி சரியான ஊட்டச்சத்துகள் சமிபாட்டு மண்டலத்தில் சேர்வதற்கு உதவுகின்றன.

**வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது**

அன்னாசிச் சாறில் அதிகமாக உள்ள விற்றமின் 'சி' சத்து, கொலாஜென் உறபத்தியை அதிகரிக்கிறது.
இதனால் திசுக்கள், தசைகள் . எலும்புகள் . குருதி நாளங்கள், போன்றவற்றின் உருவாக்கத்திற்கு இந்த கொலாஜென் உதவுகிறது. நோயிலிருந்து மீண்டு வந்தவர்கள், அறுவைச் சிகிச்சை முடித்து வந்தவாகள், மீண்டும் ஆரோக்கிய நிலைக்குச் செல்ல இந்தப் பழச்சாறைப் பருகலாம்.
நல்ல உடல் வளர்ச்சியும் முன்னேற்றமும் காணப்படும். பொட்டாசியம் குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்துவதோடு இல்லாமல், உடலில் நீர்ச் சத்தை சமன் செய்கிறது. நரம்புகள் தூண்டப்படுகிறது.
மற்றும் தசைகள் சுருங்கும் தன்மை சீராக்கப்படுகிறது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவர்களுக்கு உகந்த தசைச் செயற்பாடு இருப்பது அவசியம். அவாகள் அன்னாசிச் சாறைக் குடிப்பதன்மூலம் நல்ல பயனை அடையலாம்.

**புற்று நோயை எதிர்க்கிறது**

ப்ரோமெலைன் மற்றும் பீட்டா கரோடின இரண்டுமே புற்று நோய்க்கு எதிராக செயற்படும் தன்மை கொண்டவை. இவை புற்று நோய் ஏற்படுத்தும் மற்றும் பரப்பும் கலங்களின் உறபத்தியை குறைகின்றன. ஒக்ஸிஜனேற்றதால் ஏற்படும் மன அழுத்தத்தை போக்குகிறது. இதனால் நாட்பட்ட வியாதிகள் குணமடைகின்றன.

**தீய விளைவுகள்:**

இந்தப் பழத்தை அதிகமாக உட்கொள்வதால சில தீய விளைவுகளும் ஏறபடுகின்றன. அவை காப்ப கால சிக்கல்கள். நீரிழிவு பாதிப்புகள், உடல் நிறை அதிகரிப்பு. ஒவ்வாமை. குருதிப் போக்கு போன்றவை ஆகும்.
அதிகமான அளவு உடகொள்ளாமல் இருப்பதால சிறந்த பலன்களை அடையலாம்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 200 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 550 | – |
| சுறா | 600 | 700 | 900 | 400 |
| சீலா | 400 | 400 | 450 | 600 |
| விளை | 600 | 400 | 400 | 400 |
| முரல் | 350 | 350 | 550 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 450 | – |
| ஓரா | 350 | 300 | 350 | 300 |
| திரளி | 250 | 200 | 150 | 200 |
| நகரை | 250 | 150 | 350 | 200 |
| சூடை | 150 | 100 | 150 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 250 | 200 |
| திருக்கை | 350 | 200 | 350 | 300 |
| மதனம் | 250 | 150 | 200 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 350 | 350 |
| வாளை | 150 | 200 | 250 | 300 |

# கடுகின் மகத்துவம்



கடுகைத் தூளாக்கி வெந்நீரில் ஊற வைத்து வடித்து அருந்தினால் விக்கல் குண மாகும். கடுகை அரைத்துப் பற்றிட குருதிக்கட்டு, மூட்டு வலி தணியும். கை, கால்கள் சில்லிட்டு விறைத்துக் காணப்பட்டால் கடுகை அரைத்து துணியில் தடவி கை, கால்களில் சுற்றி வைக்க வெப்பத்தை உண்டாக்கும். உடனடியாக விறைப்புத் தன்மை சீராகும். கடுகு, பூண்டு, வசம்பு, கருவாப்பட்டை, கழற்சிக்காய், கடுகு, ரோகிணி ஆகியவற்றை சம அளவு எடுத்து நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி இருவேளை வீதம் ஒரு வாரம் குடித்து வர வாதம், வாய்வு, குத்தல் பிரச்சினை குணமாகும். கடுகு, மஞ்சள் சம அளவு எடுத்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடிகட்டிக் காதில் சில சொட்டுகள் இட, தலைவலிக்கு நிவாரணம் கிடைக்கும்.




## அடுத்த மாதத்தில் வருகிறது

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வரும் நடிகை நயன்தாராவின் நடிப்பில் உருவாகி இருக்கும் 'அறம்' படம் அடுத்த மாத ஆரம்பத்தில் திரைக்குவரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

பெண் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் இருக்கும் கதைகளாக தெரிவு செய்து நடித்து வருகிறார் நயன்தாரா. இவரது நடிப்பில் அடுத்ததாக 'அறம்', 'வேலைக்காரன்', 'இமைக்கா நொடிகள்', 'கொலையுதிர் காலம்', உள்ளிட்ட படங்கள் தயாராகியுள்ளன.

சிவகார்த்திகேயனுடன் நயன்தாரா இணைந்து நடித்திருக்கும் 'வேலைக்காரன்' படம் திரைக்கு வரும் திகதி பிற்போடப்பட்டதை அடுத்து, அறம் படம் திரைக்கு வரும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த மாதம் 3ஆம் திகதி படம் திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கோபம்

என்பது கொடிய அமிலம். அது விழும் இடத்தை விட இருக்கும் இடமே பெரிதும் நாசமாகும்.

சிலர் விட்டுப் போன வெற்றிடங்களை எவராலும் நிரந்தரமாக நிரப்ப முடிவதில்லை...

நாட்களை இனிமையாக ஆரம்பிக்க வானம் திறப்பதற்காக காத்திருக்க வேண்டியதில்லை. இனிய புன்னகைகள் போதும்!

கவலையற்று இருப்பதற்கான ஒரு எளிய வழி, கவலைப்படுவதற்கு அவகாசம் வழங்காமல் இருப்பது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிரம சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**இடபம்:** மனதில் ஒருமுகத்தன்மையுடன் செயல்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** கடின பணிகளையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். பெண்கள் தர்ம சிந்தனையுடன் செயல்படுவர்.

**துலாம்:** பகைவரும் நட்பு பாராட்டுவர். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களால் உதவியுண்டு.

**தனுசு:** பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள இலாபம் கிடைக்கும்.

**கும்பம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். பொது இடங்களில் விவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும்.

**மீனம்:** முன்யோசனையுடன் செயல்பட்டு வருவீர்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிர்ஷ்டகரமாக இலாபம் அதிகரிக்கும்.

## நகரத்தில் வசிப்பவர்களுக்கு சொந்த ஊருக்குத் திரும்புவதே



ஒரு பண்டிகைதான்...

## அடேய் உங்க ஊர்லதான் இதுக்கு பேர் பேஸ்புக்



எங்க ஊர்ல இதுக்குப் பேர் பெட்ரூம். 24 மணிநேரமும் இங்கதான் பாய்போட்டு படுத்துக் கிடப்போம்.

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | | | | |
| | | | | | 3 | 5 | | |
| | 7 | 6 | | | 1 | | 8 | |
| 7 | | | 3 | | 8 | 9 | 2 | |
| 3 | | 9 | | 4 | | | | |
| | | | 7 | | | | | 4 |
| 9 | 8 | | | 2 | | 7 | 4 | |
| 4 | | 2 | | 8 | 7 | 6 | | |
| 6 | 1 | 7 | | 3 | 4 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 | 7 | 5 |
| 9 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 | 4 | 1 |
| 8 | 1 | 5 | 7 | 4 | 6 | 3 | 9 | 2 |
| 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 6 | 4 |
| 4 | 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 3 | 8 |
| 5 | 6 | 1 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 9 | 6 | 2 | 1 | 8 | 4 | 5 | 3 |
| 3 | 2 | 8 | 5 | 6 | 4 | 9 | 1 | 7 |
| 1 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

பாசம் கொண்டால்
பிரிவு இல்லை

கோபம் கொண்டால்
உறவு இல்லை


பேராசை கொண்டால்
நிம்மதி இல்லை

விழிகள் இல்லை என்றால்
பார்வை இல்லை

வலிகள் இல்லை என்றால்
வாழ்க்கை இல்லை


முயற்சி இல்லை என்றால்
வெற்றி இல்லை

முயன்ற மனிதர்
தோற்றது இல்லை



பெண்களின் சந்திப்பு

## உரிய நிறங்களைப் பயன்படுத்தி இலங்கையின் தேசியக் கொடியை நிறம் தீட்டுக




## பின்வரும் இனத்தவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய கலாசாரப் பண்புகளை நிரப்புவோம்



1. இனம் :..............................
2. பின்பற்றும் சமயம் :..............................
3. வழிபாட்டிடம் :..............................
4. வழிபாட்டு நூல் :..............................
5. கொண்டாடும் பண்டிகை :..............................



1. இனம் :..............................
2. பின்பற்றும் சமயம் :..............................
3. வழிபாட்டிடம் :..............................
4. வழிபாட்டு நூல் :..............................
5. கொண்டாடும் பண்டிகை :..............................



1. இனம் :..............................
2. பின்பற்றும் சமயம் :..............................
3. வழிபாட்டிடம் :..............................
4. வழிபாட்டு நூல் :..............................
5. கொண்டாடும் பண்டிகை :..............................

## நகைச்சுவைக் கதை
# வகுப்பறைக்கு வெளியே




அது முற்று முழுதாக ஆண் பிள்ளைகளைக் கொண்ட ஆறாம் வகுப்பு. அந்த வகுப்பின் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். குழப்படி செய்யும் மாணவர்களை அவர் தண்டிக்கும் விதமே வேறு. முழங்காலில் நிற்கச் சொல்வார். தனது பாடம் முடியும் வரை வாங்கின் மேல் ஏறி நிற்கச் சொல்வார். முன்பக்கமாகக் குனிய வைத்து பிரம்பினால் அடியும் போடுவார்.

அப்படித்தான் ஒருநாள் புத்திக் கூர்மையும் நகைச்சுவை உணர்வும் மிகுந்த முகுந்தன் என்ற மாணவன் வகுப்பில் படிக்கும் நேரத்தில் குழப்படி செய்தான் என்று கண்ட வகுப்பாசிரியர் அவனை வகுப்பிலிருந்து வெளியே போகச் சொல்லி தனது பாடநேரம் முடியும் வரை வெளியே நிற்கச் சொல்லிப் பணித்தார்.

முகுந்தனும் பணிவுடன் வகுப்பறையைவிட்டு வெளியேறினான். நிமிடங்கள் கடந்தன. எப்போது வகுப்பாசிரியரின் வகுப்பு முடியும் என்ற துடிப்புடன் கால்கடுக்க வகுப்பறைக்கு வெளியே நின்றிருந்தான் முகுந்தன். அவனது நல்ல நேரமோ கெட்ட நேரமோ தெரியாது அவனது தந்தையின் நண்பரான அதே கல்லூரியில் கற்பிக்கும் பிறிதொரு ஆசிரியர் அவனது வகுப்பறைக்கு வெளியே இருந்த விறாந்தையில் வந்து கொண்டிருந்தார். தனது நண்பரின் மகன் வகுப்பறைக்கு வெளியே நிற்புதை அவர் கண்டார். நிலைமையை ஊகித்தபடி ''என்ன முகுந்தன் வெளியே நிற்கிறீர்? வகுப்பில் படிக்கவில்லையா?" என்று கேட்டார். முகுந்தனோ "சேர் வகுப்பிலே இருக்கும் எல்லோரும் குழப்படி செய்கிறார்கள். நானும் அவர்களோடு சேர்ந்தால் குழப்படி செய்து கெட்டுப்போய் விடுவேன் என்று வகுப்பாசிரியர் என்னைப் பிடித்து வெளியில் விட்டுவிட்டார்" என்றான். சற்று குரலைத் தாழ்த்திய தொனியில் முகுந்தன் கூறிய பதிலைக் கேட்ட முகுந்தனின் தந்தையின் நண்பர் அவனது தோளில் செல்லமாகத் தட்டிவிட்டுத் தனது தலையைச் சொறிந்தபடி, மனதுக்குள் இந்தக் கால மாணவர்கள் சமய சந்தர்ப்பங்களில் தமது நிலைமைகளைச் சமாளிக்க உதிர்க்கும் நகைச்சுவை வெடிகளை ரசித்தபடி தனது வகுப்பறை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.



# வழிகாட்டுவோம்



# நல்ல நட்பை பேணுவோம்



நல்ல நண்பர்களாக இருப்பினும் அவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. இந்தக் கருத்து வேறுபாடுகளால் நெருக்கமாக பலநாள் நட்பாயிருந்த நண்பர்கள் பிரிந்து எதிரிகளாகி விடுவதும் உண்டு. நல்ல நட்பைப் பேணிக்கொள்வதற்கு நிபுணர்கள்சிலயோசனைகளைக்கூறியுள்ளனர்.

நண்பருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டுமாகில் அதை நீங்களே அவரிடம் நேரடியாகத் தெரிவித்து விடுங்கள். அல்லது உங்கள் கைப்பட கடிதம் ஒன்றை எழுதி அவருக்கு அனுப்பி வையுங்கள்.

ஏனெனில் இதுவிடயத்தில் நேரடித் தொடர்பு முக்கியம். அதைவிடுத்து மற்றொருவர் மூலமாக நண்பனுக்கு விடயத்தை அனுப்பினால் நீங்கள் சொன்ன செய்தி அப்படியே அவருக்குப் போய்ச் சேராது அது கூட்டியோ குறைத்தோ, திரிபு பட்டோதான் போய்ச்சேரும். நண்பர் இதனால் மேலும் குழப்பம் அடைவார்.

நீங்கள் ஒரு நல்லகாரியத்தைச் செய்யும் போது அதனால் அவருக்கு அதில் ஓர் ஈடுபாடு ஏற்பட அவர் உங்கள் மட்டில் மேலும் நல்ல கரிசனை கொள்வார்.

எமக்குப் பக்கத்தில் நண்பர் இருந்தால் அவர் மகிழ்ச்சியடையும் விதத்தில் அது சின்னச் சின்னச் செயல்களாக இருந்தாலும் ஏதாவது செயல்களைச் செய்ய வேண்டும்.

உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பருக்கோ ஏதாவது பிரச்சினையாயின் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து மனம் விட்டுப் பேசவேண்டும். ஆலோசனை செய்ய வேண்டும். உங்கள் நண்பருக்கு "எனது யோசனையும் கேட்கப்பட்டதே" என்கிற நினைப்பே அவருக்கு ஒரு மனநிறைவைத் தரும்.

உங்கள் நண்பர் செய்யும் ஒருகாரியம் தப்பாக இருந்தாலும் உடனேயே "நீ செய்வது தப்பு" என்று தீர்ப்புச் சொல்லாதீர்கள். அவர் அதைச் செய்வதற்கான காரணங்கள் எவ்வளவோ இருக்கும். அவற்றைப்புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நண்பர் காரணங்களைச் சொன்னால் பொறுமையாகக் கேட்கவேண்டும். அவர் சொல்ல விரும்புவதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

நண்பர் ஒரு கருத்தை உங்களிடம் சொன்னால் 'இது சரியில்லை' 'ஒத்துக் கொள்ள மாட்டேன்' என்றெல்லாம் மறுத்துக் கூறாது. அவர் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டு பின்னர் நிதானமாக உங்கள் கருத்தைக் கூறவேண்டும்.

# விதை நெல் தேவையானோர் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற் செய்கைக்கான விதை நெல் தேவைப்படுபவர்களுக்கு ஒரு புசல் ஆயிரத்து 650 ரூபாவுக்கு வழங்க முடியும் என்று மாவட்ட கமநல உதவி ஆணையாளர் இ.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் கமநல உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:

2017/2018 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கையின்போது மாவட்டத்தில் 42 ஆயிரத்து 500 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதற்கான பணிகள் மிக மும்முரமாக இடம் பெறுகின்றபோதும் தற்போதுவரை தடையாகவுள்ள ஒரே விடயம் மழை இன்மையே.

விதை நெல் தடையின்றிப் பெற்றுக் கொள்ளும் போதிய வாய்ப்புள்ளது. எனவே விதை நெல் தேவையான விவசாயிகள் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் வழங்கப்படும்.

தற்போது ஒரு புசல் சிவப்பு நாடு விதை நெல் ஆயிரத்து 650 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். மாவட்டத்தில் புழுதி விதைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரைக்கும் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு பல ஆயிரக்கணக்கான நிலம் உழவு செய்து பதப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பதப்படுத்திய விவசாயிகள் பலரிடம் விதை நெல் கையிருப்பிலும் உள்ளது. அவ்வாறு கையிருப்பில் இல்லாதவர்கள் எவ்வளவு விதைநெல் தேவையானாலும் உடன் வழங்கும் வகையில் ஏற்பாடுகள் உள்ளன. அதனால் உடன் தொடர்பு கொள்ள முடியும். இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரைக்கும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் மட்டும் 5 ஆயிரத்து 319 புசல் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. பரந்தன் விதை ஆராய்ச்சி நிலையத்தினாலும் விதை நெல் விநியோகம் இடம்பெற்றுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-101)

# முல்லைத்தீவில் காய்ச்சலால் குடும்பத் தலைவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 19

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பத் தலைவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட தவராசா சுதாகரன் (34) என்பவரே உயிரிழந்தார். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குறித்த நபர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

அது தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-ரி3)

**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

**076 447 2598**

## காணவில்லை

யா/போதனா வைத்தியசாலையில் பாலசரஸ்வதி இராமச்சந்திரசர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (615843466V) செல்வன் இராமச்சந்திரசர்மா பார்த்தீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (942151985V) அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது.

**தொடர்பு : 077 237 8059**

27 / 4 இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## சமையலாளர் தேவை

யாழ்.நகரில் முன்னணி சைவ உணவகத்திற்கு நல்ல தேர்ச்சி பெற்ற சமையலாள் ஒருவரும் சமையல் உதவியாளர் ஒருவரும் தேவை. நல்ல அனுபவமுள்ள தென்னிந்திய சமையலில் தேர்ச்சி பெற்றிருப்பது மிகவும் விரும்பத்தக்கது. பொருள்களை தயாரிப்பதற்கு ஏற்பசம்பளம் வழங்கப்படும் தயவு செய்து கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 328 7485**


# விபத்தில் ஓட்டோ சேதம்

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்ப்பாணம், கலட்டியில் முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் வந்தவர் அந்த இடத்தில் நிற்காது தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. மதியம் 1 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. விபத்தில் முச்சக்கர வண்டியின் முகப்பு கடும் சேதத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. உடனடியாகவே அவசர பொலிஸ் இலக்கம் 119க்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்கியபோதும மாலை 3 மணிவரையில் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவில்லை என்று முச்சக்கர வண்டியின் உரிமையாளர் தெரிவித்தார். (ற-101)

## மரண அறிவித்தல்

### பன்னீர்ச்செல்வம் விஜயகுமார் (விஜி)



மண்கும்பான் கிழக்கு (4) நான்காம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஷஸ்வின் ஹொட்டல் உரிமையாளரும் ஆன பன்னீர்ச்செல்வம் விஜயகுமார் (விஜி) 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பன்னீர்ச்செல்வம் சறோஜா தம்பதியினரின் அன்பு மகனும் ஜனனியின் அன்புக்கணவரும் ஷஸ்வினின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செல்வி புஸ்பராணி நாகமணி

*(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர் - வேலணை)*



வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஸ்பராணி நாகமணி (ஓய்வு பெற்ற வைத்தியசாலை ஊழியர் - வேலணை) நேற்று (18.10.2017) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் நா.நாகபூரணியம்மா (மன்னார்), காலஞ்சென்றவர்களான மு.செல்வபாக்கியலக்சுமி, ரெ.மனோண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு "இன்பம் மலர்ச் சாலை" (கோம்பயன்மணல் மயானம் அருகில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 026 5637** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு பொன்னையா



*தோற்றம் 08.06.1936 மறைவு 18.10.2017*

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பொன்னையா நேற்று (18.10.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஈஞ்சடி, சுதுலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் சிவகுமார் (நன்னடத்தை உத்தியோகத்தர் - நீதிமன்றப் பிரிவு மல்லாகம்), நந்தகுமார் (முகாமைத்துவ உதவியாளர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), ரஜனி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), சுரேஸ்குமார் சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதினி (மானிப்பாய் சென்ரான்ஸ் றோ.க.த.க. பாடசாலை), விஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சங்கானை பிரதேச செயலகம்), சற்குருநாதன் (ஜேர்மனி), பத்மசீலன் (ஜேர்மனி), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மகாதேவன், சண்முகநாதன், சிவதாசன் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் அக்ஷிகா, வருணிகா, ஆருஷா, அஜீசன், அபிரா, சஸ்மிரா, விதுஷன், அபிசன், மயூரிக்கா, தன்யா, கம்ஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 225 6323**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி பத்மராசா

*(ஈஸ்வரி)*

சங்கானை, நாகலிங்கசுவாமிகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பத்மராசா (ஈஸ்வரி) நேற்று (18.10.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்மராசா அன்சன் நகைமாடம்,**
**பிரதான வீதி, சங்கானை.**
**077 600 2584, 077 685 5113**

**தகவல்:**
**லயன் ப.திலீபன் (மகன்)**

## முல்லை...

மாக ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சம்பவம் இடம்பெற்று இரண்டரை மணி நேரத்தின் பின்னர் கடற்படையினர் அங்கு வந்தனர். அவர்களும் ஒரு படகில் தேடினர்.

இளைஞர்கள் அலையில் இழுபட்டுச் சென்றதாகச் சொல்லப்பட்ட பகுதியில் கரை வலையை விரித்து, வலையின் இரண்டு பக்கமும் மக்கள் திரண்டு இழுத்தனர். ஆனால், காணாமற்போன மாணவர்களை மீட்க முடியவில்லை. கடற்படையினர் ஆழப் பகுதியில் மூழ்கியும் தேடிப்பார்த்தனர்.

மீனவர்கள் இதன் பின்னர் திருக்கைவலை எனப்படும் ஆழச்செல்லும் வலையினைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் நான்கு படகுகள் சகிதம் தேடுதல் நடத்தினர். இதில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. சடலம் கரைக்கு கொண்டு வரப்பட்டதும் உறவினர்கள் கதறியழுதனர். மற்றையவரைத் தேடும் படலம் நேற்றுமுன்னிரவு வரை வெளிச்சம் பாய்ச்சியும் தொடர்ந்தது. தீபாவளித் தினமான நேற்று இந்தச் சம்பவத்தால் முல்லை மாவட்டமே சோகமயமானது.

"இந்தக் கடலில் மக்கள் குளிப்பது வழமை. ஆபத்தான கடல் அல்ல இது. ஆனால் நேற்று சற்று அலை அதிகமாக இருந்தது. அதனால் இந்த மாதிரி நிகழ்ந்திருக்கலாம்" என்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.
(உ-5,ரி3)

## வடக்கு...

செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. கட்சியின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத் கலந்து கொண்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குக் காலம் முடிந்துவிட்டது. புதிய அரசமைப்பொன்றை வடிவமைத்துக் கொள்ளுதல் காலத்தின் தேவையாகும்.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக களமிறங்கும்போது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை ஒழிப்பதாகும். அதன் நிமித்தமே மக்கள் மைத்திரிக்கு வாக்களித்திருந்தனர்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க புதிய அரசமைப்பு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்மையான்மையுடன் நிறைவேற்றப்பட்ட வேண்டும் என்பதுடன், பொது வாக்கெடுப்பும் அவசியமாகும். தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது மைத்திரிபால சிறிசேனவினதும், அரசினதும் பொறுப்பாகும். இடைக்கால அறிக்கை இறுதிப்படுத்தப்பட்ட அரசமைப்பல்ல.

வடக்கு, கிழக்கை மக்கள் விடுதலை முன்னணியே 2006ஆம் ஆண்டு பிரித்திருந்தது. மீண்டும் வடக்கு, கிழக்கை ஒன்றிணைக்க ஒரு போதும் மக்கள் விடுதலை முன்னணி அனுமதியளிக்காது. முஸ்லிம் மக்களும் ஆதரவளிக்க மாட்டார்கள்.

அரச தலைவர் தேர்தலின்போதும், சோபித தேரரின் இறுதிக் கிரியைகளின் போதும் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும் என்று மைத்திரி உறுதியளித்திருந்தார். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி அவர் மீண்டும் அரச தலைவராக முயற்சித்தால் மகிந்த ராஜபக்சவைப் போன்று மைத்திரியையும் தோற்கடிக்க நாம் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.
(உ-5)

## கைதிகளின்...

பாதிப்பு இல்லை என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடக பேச்சாளர் துஸார உப்புல்தெனிய தெரிவித்தார்.

கடந்த மாதம் 25ஆம்திகதி ஆரம்பித்த உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அநுராதபுரம் சிறைச்சாலை மருத்துவமனையிலிருந்து அரசியல் கைதிகள் மூவரும் நேற்றுமுன்தினம் வெளியியேறியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சைக்கு அமைய உடல் நிலையில் பாதிப்பு இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.
(உ-5)

## சிறுமிக்கு...

கிளிநொச்சி, ஒக்.19

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதியில் சிறுமி ஒருவரைப் பலாத்காரம் செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று இரவு முழங்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அயல்வீட்டில் உள்ள 15 வயதுச் சிறுமியை பாலியல் முறைகேட்டுக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். சிறுமியை மேற்படி நபர் முறை தவறி அணுகியபோது அவரின் பிடியிலிருந்து தப்பித்த சிறுமி, நடந்தவற்றைப் பெற்றோரிடம் தெரிவித்தார். அவர்கள் உடனடியாக 119 மூலம் பொலிஸாருக்குத் தகவல் தந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த முழங்காவில் பொலிஸார், சிறுமியிடம் விசாரணை நடத்திய பின்னர் சந்தேகநபரைக் கைது செய்தனர். சிறுமி பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக இதேபோன்ற குற்றச்சாட்டில் முன்பும் ஒரு முறைப்பாடு உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-101)

## இடைக்கால...

எதிர்வரும் 30ஆம் திகதி அரசமைப்புச் சபையில் (நாடாளுமன்றம்) இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னதாக, கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் இதில் கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இடைக்கால அறிக்கை தொடர்பில் ஆராயத் தேவையில்லை என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவிலேயே இது ஆராயப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-5,31)

## அரசியல்....

வுடன் இன்று இரண்டு தரப்புக்கள் சந்திப்புக்களை நடத்தவுள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தனியாகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தனியாகவும் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவுனியாவில் 4 ஆண்டுகளாக நடந்துவந்த வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டதை எதிர்த்து தமிழ் அரசியல் கைதிகள் மூவர் கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இவர்களது கோரிக்கையை நிறைவேற்றுமாறும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும் கோரி கடந்த வெள்ளிக் கிழமை வடக்கில் முழு அடைப்புப் போராட்டம், கவனவீர்ப்புப் போராட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக, அரச தலைவர் மைத்திரிபாலவை இது தொடர்பில் சந்திப்பதற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதற்கு அமைவாக இன்று காலை 10 மணிக்கு அரச தலைவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் சந்திக்கவுள்ளனர். இந்தக் குழுவில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள அரசியல் கைதியான ம.சுலக் ஷனின் சகோதரியும் கலந்து கொள்ளவுள்ளார். அவரும் பல்கலைக் கழக மாணவியாவார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் தமிழ் அரசியல் கைதிகள் மூவரினதும் உறவினர்கள் இன்று மதியம் அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்து இந்த விடயம் குறித்து நேரில் பேசவுள்ளனர். (உ-5,31,101)

## நீதி...

இன்று பேச்சு நடத்தவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் முன்வைத்திருந்தார். பதிலளித்து உரையாற்றிய அரச தரப்பு அமைச்சர்கள், இந்த விடயம் தொடர்பில் இன்று வியாழக்கிழமை பேச்சு நடத்துவோம் என்று குறிப்பிட்டிருந்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தப் பேச்சு இடம்பெறும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளபோதும் நேற்றிரவு வரையில் அதற்கான நேரம் இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.
(5,31,101)

## தனக்குள்...

வரவேண்டாம் என்பதே அதன் அர்த்தமாகும். யாழ்ப்பாணத்தில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இதைத்தான் சொல்லியிருந்தார். அவர் என்னைக் குறிவைத்துத்தான் பேசினார் என்று நீங்கள் தவறாக எடைபோட வேண்டாம்" என்றார் மகிந்த.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேசிய தமிழ் மொழித் தின விழாவில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தன்னைப் பலவீனப்படுத்தினால் பேய்கள்தான் சக்தி பெறும் என்று கூறியிருந்தார். 2015 அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரையின்போது யாழ்ப்பாணத்தில் வைத்து அப்போதைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச தெரியாத தேவதையைவிட தெரிந்த பிசாசு எவ்வளவோ மேல் என்று குறிப்பிட்டிருந்தார். மைத்திரியின் பேச்சு அதற்கான பதில் என்று அரசியல் அவதானிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இது தொடர்பில் மகிந்த ராஜபக்சவிடம் கேட்கப்பட்டது. "இந்த அரசு கிட்டத்தட்ட பாம்பு செத்த பாம்பாட்டியின் நிலையில்தான் இருக்கிறது. மக்களின் ஆதரவு இவர்களுக்கு இல்லை. அரச தலைவருக்கு வாக்களித்த தமிழ் மக்களே அவரை வெறுக்கின்றனர். அவர் பேய் என்று என்னைச் சொல்லவில்லை. நாங்கள் கோபப்படும்போது நமக்குள் இருக்கும் பேயை வெளியே கொண்டு வரவேண்டாம் என்பதற்காக 'மாவ யக்கா அவுசன்னேப்பா' என்று சிங்களத்தில் சொல்வோம். அதனைத்தான் மைத்திரி சொல்லியுள்ளார். அதுதான் உண்மை. நன்றாக யோசித்துப் பாருங்கள். புரியும். இப்போது தேர்தல்களை ஒத்திவைப்பது யார்? பேயின் அவதாரங்களா?" - என்றார். (உ-5)

## புதிய...

இரு பீடங்களினதும் ஏகோபித்த முடிவுகள் எடுக்கப்பட்டு ஏனைய சங்கத்தினருக்கும் அரச தலைவர், உள்ளிட்ட நாட்டின் தலைவர்களுக்கும் அந்த முடிவை அறிவிப்பது என இணக்கம் ஏற்பட்டிருந்தது.

சந்திப்பின் முடிவில் மல்வத்து பீட போசகர் திம்புல்கும்புரே விமலடம்ம தேரர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய் அரசமைப்பு எமக்கு அவசியமற்றது. அது தேவையில்லை என்றே கருதுகின்றோம். ஏக்கிய ராஜ்ய என்பது தொடர்பில் குழப்பங்கள் உள்ளன. பௌத்த மதம் சம்பந்தமாக முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும் அது தொடர்பில் சரியான தெளிவு இல்லை. மாகாணங்களுக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் புதிய அரசமைப்பு எமக்குத் தேவையில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம். தற்போது இருக்கும் அரசமைப்பே போதுமானது. அது சிறந்ததாகவும் உள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறு எமது பீடம் மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து பௌத்த தேரர்களும் ஏகோபித்த எதிர்ப்பை வெளியிடவுள்ளோம். அத்துடன் அரசையும் அந்தச் செயற்பாடுகளைக் கைவிடுமாறும் கூறவுள்ளோம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் அறிமுகமான மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்கும் ஓர் உபாயமாகவே தற்போதைய அரசமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவொரு சிறிய நாடு. இங்கு அவ்வாறான அதிகாரங்களைப் பிரித்து வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் அவ்வாறே இருக்க வேண்டும். இந்த நிலைப்பாடுகளில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அரசியல் தலைவர்களுக்கும் சொல்வோம் - என்றார்.

அஸ்கிரிய பீடத்தின் தரப்பில் கலந்துகொண்ட தேரர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

தற்போது வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் நாட்டின் ஏக்கிய ராஜ்ய தன்மைக்குப் பாதிப்பு வந்துள்ளது. இதனால் எமக்குள் பல்வேறு முரண்பாடுகள் எழுந்துள்ளன. அதேபோன்றுதான் அதிகாரங்களைப் பகிர்வதானால் நாட்டில் பிரிவினை யொன்று உருவாகவுள்ளமையும் தெரிகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளை உடன் நிறுத்திக்கொண்டு நாட்டின் பொருளாதார மேம்பாடுகள் தொடர்பாகவே கவனம் செலுத்தவேண்டும்.

தற்போது வெளிவந்திருக்கும் இடைக்கால அறிக்கையை அப்படியே முடக்கிவிட்டு எதிர்காலத்தில் புதிய அரசமைப்புக்கான அவசியம் ஏற்படும் நில்மையொன்று உருவானால் அப்போது அது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானிக்கலாம் -என்றார். (உ-5,31)

## பிக்குகள்...

கள் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ள நிலையில், பேரவைக்கான அறிவிப்பை விரைவில் அவர் வெளியிடுவார் என்று அறியமுடிகின்றது. இதனாலேயே, புதிய அரசமைப்புக்கான வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையை நிராகரித்து அவர் கடந்த 16 ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

மக்கள் மத்தியில் நன்மதிப்புள்ள, கல்வித் துறையில் தேர்ச்சி பெற்ற பிக்குகளை உள்ளடக்கி குறித்த பேரவை அமைக்கப்படவுள்ளது. இந்த அமைப்புக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள வெளிச்சம் (எலிய) அமைப்பின் ஆதரவும் வழங்கப்படவுள்ளது.

ஆட்சிபீடத்தினதும், அரசியலினதும் கடிவாளமாகப் பௌத்த பிக்குகளே திகழ்கின்றனர். பிக்குகளைப் பயன்படுத்தித்தான் பண்டாரநாயக்க ஆட்சிபீடமேறினார். பிக்குகளைக் களமிறக்கித்தான் பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிரான பரப்புரையை முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன முன்னெடுத்திருந்தார். இப்போது அதே உத்தியையே தானும் கையாள்வதற்கு மகிந்த ராஜபக்ச முற்பட்டுள்ளார். (உ-5)

## தீபாவளி...

வட்டுக்கோட்டையில் இருந்து 3பேரும், சாவல்காட்டுப் பகுதியில் இருந்து 5 பேரும், மானிப்பாயில் இருந்து 2 பேரும், நாவற்குழிப் பகுதியில் இருந்து 3 பேரும், மாதகலில் இருந்து 2 பேரும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வேறு இடங்களிலிருந்து 8 பேரும் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 24ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த 3பேரும், கரவெட்டியைச் சேர்ந்த 2பேரும், வரணியைச் சேர்ந்த ஒருவருமாக 6 பேர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டு, கத்திக்குத்து, கொட்டன்களால் தாக்குதல், போத்தலால் குத்தியமை உள்ளிட்ட காரணங்களால் இவர்கள் காயமடைந்துள்ளனர். (உ-5,26,101)

## தீபாவளி பட்டாசு...

மூவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"சுப்பர்மடப் பகுதியில் இளைஞர்கள் சிலர் வெடி கொளுத்தி விளையாடினர். அங்கிருந்த வீடு ஒன்றினுள்ளும் வெடிகள் வீழ்ந்துள்ளன. வீட்டுக்குள் ஏன் வெடிகொளுத்திப் போட்டீர்கள் என்று இளைஞர்களிடம் வீட்டு உரிமையாளர் கேட்டுள்ளார். இது வாய்த்தர்க்கமாக மாறியது. திடீரென வீட்டு உரிமையாளரையும் அவர்களது உறவினர்களையும் இளைஞன் ஒருவன் வாளால் வெட்டியுள்ளான். மூவர் இதில் காயமடைந்தனர். மூவரும் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வாளால் வெட்டிய இளைஞன் உள்ளிட்ட தர்க்கத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் மூன்று இளைஞர்களை தேடிவருகின்றோம்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-5)

## அலைபேசிகள்...

அலைபேசிகளையும் பாதிக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாவனையாளர்களை அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர சேவைகள் நிறுவனம் கேட்டுள்ளது. (உ-5)

# சுப்பர்றாங் சம்பியன்



யாழ்ப்பாணம், ஒக். 19
சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகம் அமரர் சோமு ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லைத் தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருந்தபோது சுப்பர்றாங் அணிக்கான கோல் ஜெகனால் பதிவானது. 1:0 என்று சுப்பர் றாங்கின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சுப்பர்றாங் அணி.
(ம-23)

## முழங்காவில் லீக் கழகங்களின் மைலோ கிண்ண முடிவுகள் சில

மைலோ கிண்ணத் துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், முழங்காவில் லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களின் முடிவுகள் சில.
முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஜொலி போய்ஸ் அணியை எதிர்த்து கலையொளி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் கலையொளி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற் றுக்குத் தகுதி பெற்றது.
தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் செந் தாரகை அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து இளந்தளிர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பர் அணி வெற்றிபெற்றது.
மற்றொரு ஆட்டத்தில் சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து இரணைதீவு சென். மேரிஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். ஆன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
பிறிதொரு ஆட்டத்தில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியை எதிர்த்து பூநகரி கலை ஒளி அணி மோதியது. இதில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக் குத் தகுதி பெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமுக நிலையம் வடமாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரன் வி.கழக கால்பந்தாட்டத் தொடர்**

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். போதனா மருத்துவமனையின் கால்பந்தாட்ட அணி மோதவுள்ளது.

**மைலோ கிண்ண கால்பந்தாட்டம்**

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி சங்கத்துக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்களின் மைதானங்களில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இதன்படி இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மாலை 5 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

**அம்பாள் வி.கழக கரப்பந்துத் தொடர்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில குறித்த கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளை யாட்டுக் கழக 'சி' அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'சி' அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகன தாஸ் விளையாட்டுக கழக அணியை எதிர்த்து வளக்கம் பறை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-108.23)



# மல்லாவி மத்தி. போராடி வெற்றி



யாழ். ஒக். 19
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மல்லாவி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 27:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி. சரிவில் இருந்து இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய மல்லாவி மத்திய கல்லூரி அணி முடிவில் 49:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## குசல் பெரேரா நீக்கம்

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அதிரடி வீரரான குசல் பெரேரா அணியில் இருந்துநீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. குசல் பெரேரா தனது உடற்தகுதியை நிரூபிக்காததை அடுத்து அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார். (ம)

## பாரதியை வீழ்த்தி யங்ஹென்றிஸ் அபாரம்

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி அபார வெற்றிபெற்றது.

திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 9:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

After A/L கல்விக்கான புலமைப்பரிசில்கள் புதிய தொழில் வாய்ப்புக்கள்.
sms <Name> <District>
0772 395 895

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.
இடம் :- கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
076 785 1067

**வீடு வாடகைக்குத் தேவை.**
3 or 4 bed rooms உடன் சகல வசதிகளுடன், கார் Park முக்கியம்.
இடம்: நல்லூர் சூழவுள்ள இடங்கள்.
தொடர்பு:
S.Sham Mob:076 8466129

**வாகனம் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள TATA 709 கன்ரர் 14 1/2 அடி தட்டு LH XXXX இலக்கம் கொண்ட வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு - 076 828 4555

## நாய்க்குட்டியைக் காணவில்லை

7ஆம் வாய்க்கால், புகழேந்தி நகர், மல்லாவியைச் சேர்ந்த பவுண் என்பவருடைய எட்டுமாத மங்கல் நிற வெள்ளை பொம்மேரியன் ஆண் நாய்க்குட்டி ஒன்றை 16.10.2017 முதல் காணவில்லை. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் ரூ.5000/= வழங்கப்படும். தகவல் தருபவர் விவரம் இரகசியமாகப் பேணப்படும்.

**பவுண், 7ஆம் வாய்க்கால், புகழேந்திநகர், மல்லாவி. 077 923 2634**

## கண்ணீர் அஞ்சலி

எம்முடன் உதவி முகாமையாளராக கடமையாற்றும்
**திருமதி விஜயதேவி லோகேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தவமணிதேவி செல்லத்துரை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**முகாமையாளரும் ஊழியர்களும்**
**தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி**

## தொழில் வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மருத்துவ தாதியபரிபாலகி & மருத்துவ மாது (Clinical Matron & Mid Wife)
2. தாதி (Nurse)
3. Dispensing Optician
4. Marketing Officer
5. Messenger

இப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. மருத்துவ தாதியபரிபாலகி & மருத்துவ மாது (Clinical Matron & Mid Wife)
   1. SLMC (Sri Lanka Medical Council) பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   2. போதியளவு இத் துறைசார் அனுபவம்
   3. சேவையில் இருந்து இளைப்பாறிய தாதியரும் விண்ணப்பிக்கலாம்.
2. தாதி (Nurse)
   1. Diploma in nursing
   2. 5 வருட துறைசார் அனுபவம்
   3. சிங்கள, ஆங்கில மொழிகளில் சரளமாக பேசும் ஆற்றல்
3. Dispensing Optician
   1. க.பொ.த (சா / த) (O/L) மற்றும் க.பொ.த (உ / த) (A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருந்தல் வேண்டும்.
   2. 2 வருட துறைசார் அனுபவம்
4. Marketing Officer
   1. க.பொ.த (சா / த) (O/L) மற்றும் க.பொ.த (உ / த) (A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருந்தல் வேண்டும்.
   2. சந்தைப்படுத்தல் துறையில் Diploma / Degree விரும்பத்தக்கது
   3. 3 வருட துறைசார் அனுபவம்
   4. ஆங்கில அறிவு (Speaking & Writing)
   5. Motorbike License உடையவராக இருக்கவேண்டும்.
5. Messenger
   1. க.பொ.த (சா / த) (O/L) மற்றும் க.பொ.த (உ / த) (A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருந்தல் வேண்டும்.
   2. Motorbike License உடையவராக இருக்கவேண்டும்.


மருத்துவ தாதியபரிபாலகி மற்றும் மருத்துவ மாது ஆகியோரது சம்பளம் 40,000/- இற்கு குறையாது இருக்கும். ஏனையோருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பங்கள் 06.11.2017 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரில் வரவேற்பாளர்களிடம் கையளிக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்,
நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை
No. 342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel.No. - 021 721 7324 Mobile No.- 077 773 2892
Email - nchjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### குழந்தை கணபதிப்பிள்ளை நடராசா

முன்னாள் கிராம சபைத் தலைவர் - மண்டை தீவு (சேர்மன்)



யாழ். மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு குழந்தை கணபதிப்பிள்ளை நடராசா 17.10.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தில்லைவனம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கெங்காதரன் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஈஸ்வரியின் பாசமிகு கணவரும் அறிவழகன் (அறிவு - பிரான்ஸ்), அன்பழகன்(ராசன்- பிரான்ஸ்), மதியழகன் (மதி போட்டோ - பிரான்ஸ்), ரவியழகன் (ரவி - பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம், வியாழம்மா, காமாட்சி, கனகம்மா மற்றும் பரமானந்தம் (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் - சுகாதாரத் திணைக்களம்), சோதிலட்சுமி, சரஸ்வதி, முத்துலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியசீலி(சுசி - பிரான்ஸ்), யூஜினி (பிரான்ஸ்), துர்க்காதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற காங்கேயன், கமலாசினி(பங்கஜம்), யோகேஸ்வரி, பூங்கோதை (பரிமளம்), கலாவதி, காலஞ்சென்ற ரஞ்சினி, சிவகுமார், தயாளன், விமலன்(கண்ணன்), அம்பிகை(சூரி), அம்பிகைபாகன், மங்களேஸ்வரி(கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சயந்தன், அனுசியன், ஆகாஸ், மதுசா, அபினாஸ், ரதுயா, வினயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2017) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று இறுதி வணக்கத்திற்காக மண்டை தீவில் அமைந்துள்ள அன்னாரின் பிறப்பிட இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக தலைக்கீரி, மண்டைதீவு தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**48, கன்னார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 033 8223/076 6767 710/ 077 958 0745**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.